791
1051

# சதுரங்கம்

நாரண துரைக்கண்ணன்

அருணோதயம்
வெளியீடு

# சதுரங்கம்

444
1051

நாரண துரைக்கண்ணன்

மதுரை காமராசர் பல்க
அவ்வை
தி.க. சண்முகம்
தமிழியல்

அருணோதயம்
சென்னை-14.

அருணோதயம் வெளியீடு : 14.
முதற்பதிப்பு நவம்பர் : 1955.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 109
நன்கொடை எண்: 109

விலை ரூ. 1—4—0

மதுரை காமராசர் பல்கலை...
அவ்வை
தி.க. சண்முகம் ...
தமிழியல்துறை.

மாருதி பிரஸ், இராயப்பேட்டை, சென்னை.

# பதிப்புரை

அருணோதயத்தின் 14-வது வெளியீடாக ஆசிரியர் நாரண துரைக்கண்ணன் (ஜீவா) எழுதிய **சதுரங்கம்** என்ற நாடக நூலைத் தருகிறோம். இன்று தமிழிலே நாடக நூல்கள் மிகக் குறைவாகவே வெளிவந்துள்ளன. நாடக ரசிகர்கள், நடிகர்கள் அதிகரித்து வருகின்றனர். வளர்ந்து வரும் கலை உணர்ச்சிக்கு இந்நூலும் பயன்படும் என்று கருதுகின்றோம். படியுங்கள்.

**அருணன்.**

**நாரண துரைக்கண்ணன் (ஜீவா) எழுதிய**
**எமது வெளியீடுகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| புதுமைப் பெண் | ரூ. | 1 | 12 | 0 |
| மேனகா | ரூ. | 1 | 8 | 0 |
| சதுரங்கம் | ரூ. | 1 | 4 | 0 |

மதுரை காமராசர் ப...
தி.க. ச...

# சதுரங்கம்

எல்லாம் இங்கோர் சூதாட்டம்
இரவும் பகலும் மாருட்டம்
வல்லான் மதியே ஆடுமகன்
வலியில் மனிதர் கருவிகளாம்
சொல்லா தெங்கும் இழுத்திடுவான்
ஜோடி சேர்ப்பான் வெட்டிடுவான்
செல்லா தாக்கி ஒவ்வொன்ருய்த்
திரும்ப அறையில் இட்டிடுவான்.

—ரேடியோ கீதம்.

## காட்சி 1

**இடம்** : திருச்சி
**காலம்** : காலே
**பாத்திரங்கள்** : துரைராஜன், மாணிக்கம் பிள்ளை, திரிபுர சுந்தரி.

துரை : (உற்சாகத்தோடு) அப்பா, நான் பாஸா யிட்டேன் பஸ்ட் கிளாஸிலே. ரிஸல்ட், பேப்பரிலே வந்திருக்கு. நீங்க பார்க்கவில்லையா ? (வருத்தமான குரலில்) ஆனல், ராங்க் (Rank) தான் வரவில்லே.

மாணி: எங்கோ பேப்பரைக் காண்பி. (ஒரு வினாடி மௌனம்) பரவாயில்லை. மாகாணத்திற்கு முதலாக வராவிட்டாலும், முதல் வகுப்பிலாயினும் வந்து விட்டாயே! அது போதும். மூணு பேர் தானே பஸ்ட் கிளாஸ்.

(தாயார் வருகிருள்)

திரிபுர: என்னுங்க அது?

மாணி: திரிபுரம், நீ நல்ல சமயத்தில் வந்தே! உன் மகன் பாஸாயிட்டான் முதல் வகுப்பிலே. பத்திரிகையிலே வந்திருக்கு.

திரிபுர: பாஸாயிட்டாஞ? ரொம்ப சந்தோஷம். இதுபோலவே கலியாண விஷயமும் சீக்கிரம் ஏற்பாடா யிடுத்துன்னு நான் சொன்னபடி பிள்ளையார் அப்பனுக்கு அபிஷேகஞ் செய்து வைக்கறேன்.

மாணி: இனிமேல் என்ன! எல்லாம் சுலபமா முடிந்திடும். பி.ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்ற பிள்ளைக்கு பெண்ணு கிடைக்காமல் போய்விடும்? நாளைக்கே வரப் போகிருர்கள் பார், நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு நம்ம துரைக்குப் பெண் கொடுக்க.

துரை: என்ன அப்பா, நீங்க என்ன பேசுகிறீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!

மாணி: வேறென்ன! உனக்கு கலியாணஞ் செய் வதைப்பற்றித்தான் பேசுகிருேம். இனிமேல் தடை யென்ன!

திரிபுர: தம்பி வேலையைப்பற்றி யோசிக்கிருப்போ லிருக்கு; உத்தியோகம் எதுவும் பார்க்காமே இதற்குள் கலியாணமா என்று........?

மாணி: அந்தவிதமான யோசனையே துரைக்கு வேண்டாம். பரீட்சையிலே கோட் அடித்ததுகள், காலேஜ் படியையே மிதிக்காததுகளுக்கெல்லாம் வேலை கிடைக்கும்போது, உயர்தரப் பட்டம் பெற்றுள்ள நம்ம பிள்ளைக்குத்தானு கிடைக்காமல் போகும்? முதலில் கலியாணத்தை........

துரை: (ஆத்திரத்தோடு) சரிதான், நிறுத்துங்கள் அப்பா, உங்க பேச்சை.

திரிபுர: ஏன் ராஜா, இப்படிக் கோவிச்சிக்கிறே?

துரை: பின்னே என்ன அம்மா, கலியாணம், கலியாணம் என்று எப்போப் பார்த்தாலும் தொந்தரவு பண்ணுகிறீர்கள்.

மாணி: கலியாணம் செய்யாமே........

திரிபுர: சரிதான்னு, தம்பி சங்கோஜப்பட்டுக்கிட்டு அப்படி சொன்னு நீங்க அதை நிஜமின்னு நினேச்சுப் பேசறீங்களே.

துரை: (ஆத்திரம் தொனிக்க) நீ சும்மா இருக்க மாட்டே, அம்மா!

மாணி: துரை, ஏன் இப்படிப் பதறுகிருய்?

துரை: நீங்க பேசுவது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கல்லே. அப்பா!

மாணி: என்ன பிடிக்கல்லே? உன் மனசிலுள்ளதைத்தான் சொல்லேன்.

துரை: இந்தக் கலியாணப் பேச்சே எனக்குக் கட்டோடு பிடிக்கல்லே.

திரிபுர : என்ன தம்பி! நீ பேசறது அதிசயமா யிருக்கே!

மாணி : கலியாணம் செய்து கொள்ளாமே இவரு காஷாயம் கட்டிக்கிட்டுக் காட்டுக்குப் புறப்படப் போருரு.

திரிபுர : நீங்க சும்மா இருங்கன்னு; பெற்ற பிள்ளை யோடே கூடவா தமாஷ் பேச்சு?

துரை : நான் துறவியாகப் போகிறேன் என்று உங்களிடம் சொன்னேன்! அப்படிப் போவதாக நினைச்சாலும் போக முடியாதே! எனக்குத்தான் காலில் கட்டுக் கட்டி யாச்சே, குழந்தையா யிருக்கையிலேயே.

மாணி : ஆரம்பிச்சுட்டாயா? பழைய பல்லவியை. பொம்மைகளுக்குக் கலியாணஞ் செய்வதுபோல, பாலியத்திலே நடந்த விவாகத்தைப் போய் கலியாணம் என்கிருன் இவன்.

திரிபுர : தம்பி, இவ்வளவு பெரிய பிள்ளையாகியும் நல்லது கெட்டது தெரியல்லையே! விஜயத்தை விலக்கி வைத்துத்தான் ரொம்ப காலமாய் விட்டதே!

துரை : எதற்காக விலக்கிவைக்கணும்? அப்படி என்ன அவள் தப்பு செய்துவிட்டாள்?

திரிபுர : அந்த விஷயத்தைத்தான் உன்னிடம் எத்தனையோ முறை சொல்லி யிருக்கிருமே! மறந்தா போய்விட்டாய்?

மாணி : அவனுக்கு எங்கே ஞாபகமிருக்கப் போகிறது! அவன்தான் அந்தப் பெண்ணின் நினைவாகவே இருக்கிருனே! அவள் ஒருத்திதான் உலகத்திலேயே அழகி யென்று நினைத்துக் கொண்டிருக்கிருன் இவன்?

திரிபுர : அவள் என்ன அப்படி ஓசத்தி! தம்பி மட்டும் 'ஊம்' கொடுக்கட்டும்! நாளைக்கே, மூக்கும் முழியுமா லக்ஷ்மியாட்டமுள்ள பெண்ணைப் பார்த்துக் கலியாணம் பண்ணிவைக்கிறேன், பார்! பெண்களுக்குத் தானு பஞ்சம்?

துரை : நீங்க, இப்படி யெல்லாம் பேசறது கொஞ்சங்கூடச் சரியில்லே. ஒரு பெண்ணைக் கலியாணஞ் செய்து வைத்துவிட்டு, மறுபடியும்......

மாணி: திருப்பித் திருப்பி அதைத்தானே பேசுகிறுன்?

திரிபுர: ராஜா, மறுபடியும் அந்தப் பேச்சை எடுக்காதே! அப்பாவுக்குக் கோபம் வரும்.

மாணி: அந்தச் சண்டாளர்கள் வீட்டுப் பெண் என் வீட்டில் வந்து வாழவா?

துரை: என்ன அவர்கள் செய்யாததை உங்களுக்குச் செய்து விட்டார்கள்? அப்பா!

மாணி: வேறு என்ன செய்யணும்? உலகில் நம்ப வைத்து துரோகம் செய்வதைவிடவா கொடுமையான திருக்கிறது?

திரிபுர : அந்தப் பித்தலாட்டக்காரர்கள் பேச்சை ஏன் பேசுகிறீர்கள்?

துரை : என்ன அம்மா, அப்பாவோடு சேர்ந்து நீயும் அவர்களை ஏசத்தொடங்கிட்டே?

மாணி : பெண்டாட்டி வீட்டாரைப் பற்றிப் பேசினுல், பிள்ளையாண்டானுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது; பார்த்தாயா?

திரிபுர : வரும், வரும் ; வராதா பின்னே ! இன்னும் அவர்கள் இவனை மதித்து நடந்தா இவன் பூமியிலேயே நடக்கமாட்டான்.

துரை : ஏன் மதித்து நடக்கவில்லை? அவர்கள் அன்பும் மதிப்பும் வைத்துத்தான் நடந்து வந்தார்கள். நீங்கதான் என்னை அவர்கள் வீட்டுக்குப் போகக்கூடாது என்று கட்டுப்படுத்தி நிறுத்தி விட்டீர்கள்.

திரிபுர : பெண்ணைக் கொண்டு வசப்படுத்தி மாப்பிள்ளையைக் கைக்குள் போட்டுக் கொண்டால், சம்பந்தி வீட்டாருக்குப் பட்டை நாமம் சாத்தி விடலாம் என்று பார்த்தார்கள். அதற்கு அணைபோட்டு விட்டது, அவர்களைவிட உனக்கு வருத்தமாக இருக்கிறதாக்கும்.

துரை : ஏன் அம்மா, அசட்டு பிசட்டு என்று பேசுறே! உங்களை அவர்கள் எதற்காக ஏமாற்றணும்?

மாணி : படித்த பிள்ளை என்றுதான் பேர். ஏதாயினும் தெரிந்து தொலைகிறதா? எப்படித்தான் இந்த உலகத்தில் நீ வாழப்போகிறுயோ !

திரிபுர : படிச்சிட்டா போதுமா ? உலகானுபவம் ஏற்பட வேண்டாமா ? அவனுக்குத்தான் அப்படி என்ன வயசாயுட்டுது !

மாணி : நீ எப்படி யிருக்கிறையோ அப்படித்தானே உன் பிள்ளையும் இருப்பான். நீ அவனுக்கு விஷயத்தைச் சரியாகச் சொல்லி வைத்திருந்தால் இப்போ இப்படியெல்லாம் பேசுவானு ?

துரை : அது என்ன விஷயம் ?

திரிபுர: பெண்டாட்டி, பெண்டாட்டி என்று உசிரை விடறையே! அவள் யார் என்று உனக்குத் தெரியுமோ இல்லையோ! அவள் உன் அத்தை பெண்ணுக்கும்.

துரை: அது தெரியும். அதற்கு என்ன இப்போ?

திரிபுர: நான் சொல்கிறதை முழுதும் கேட்டுவிட்டு அப்புறம் பேசு!...உறவு போகாமல் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, அண்ணன் பிள்ளைக்குத் தங்கை பெண்ணைக் கட்டிக் கொள்வது என்று நீங்க பிறந்ததுமே பேசிக்கொண்டோம். இதைப் பாட்டன் பாட்டிமாரும் பார்த்துவிட வேண்டுமென்று நீங்க சிறுசுகளா யிருக்கும்போதே உங்களிருவருக்கும் கலியாணம் செய்து விட்டோம்.

துரை: இந்த மாதிரி பொம்மைக் கலியாணஞ் செய்தது உங்கள் தவறுதானே!

திரிபுர: மற்றதையும் கேளு. அப்படிக் கலியாணம் நடந்தபோது உங்க மாமா என்ன சொன்னார் தெரியுமா? தம் சொத்து முழுவதையும் உனக்கும் விஜயத்துக்குமே கொடுத்து விடுவதாக வலியவே கூறினார். அப்படி சொல்லியவர் உன்னுடைய மேல் படிப்புக்கு ஒன்றும் உதவி செய்யாது போய்விட்டார். அப்பா அப்போதிருந்த கஷ்ட நிலையைச் சொல்லிக் கேட்டும், இப்போது ஒன்றும் முடியாது என்று நிர்த்தாட்சணியமாகச் சொல்லிவிட்டார். உன் அத்தைகூட ஆதரவாக ஒரு வார்த்தை சொல்லவில்லை. அவர்களுக்குப் பிள்ளை பிறந்த பூரிப்பு நம்மை லட்சியஞ் செய்யாது போய்விட்டார்கள்.

துரை : ஆமாம்; அவர்கள் நமக்கு எதற்காக உதவி செய்யணும்?

மாணி : எதற்காக என்று கேட்கிருய்? பெண்ணுக்கு மாப்பிள்ளை வேண்டுமென்ருல், அவர்கள் எல்லாம் செய்துதான் ஆகணும்?

துரை : நல்ல நியாயமாக இருக்கிறதே!

மாணி : நியாயத்தை ரொம்பக் கண்டு விட்டான் இவன். கஷ்ட நஷ்டப்பட்டு உன்னைப் படிக்க வைத்தேனே! நியாயம் பேச மாட்டாயா, நியாயம்! இன்னும் உனக்கு மாமனர் வீட்டு அனுசரணை யிருந்தால் ரொம்பப் பேசுவாய்.

துரை : நான் யாருடைய ஆதரவையும் எதிர்பார்த்துக் கொண்டில்லை. பிறர் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவன் மனிதனே அல்ல.

திரிபுர : உங்க மாமா சொன்ன மாதிரி, சொத்து முழுதையும் கூட நாங்கள் கேட்கவில்லையே! அவர்களுக்கு ரொம்ப நாளாக இல்லாதிருந்து இப்போதான் ஒரு பிள்ளையும் பிறந்திருக்கிறது. ஆதலால், அவர்கள் சொத்தில் பாதி பங்கு கிடைத்தால் போதும் என்றுதான் எண்ணினேம். உன்னுடைய காலேஜ் படிப்புக்கே அரைக்காசுகூட கொடுக்காதவர்களா, பிற்காலத்தில் சொத்தில் பங்கு கொடுக்கப் போகிருர்கள்? ஆதலால்தான், விஜயத்துக்கு வயது வந்ததுமே நம் வீட்டுக்கு அவளை அழைத்துக்கொள்வதற்கு முன், இவ்விஷயத்தைச் சந்தேகத்துக்கிடமின்றி தீர்த்துக்கொள்ள விரும்பினேம். அப்போது கூட, உன் மாமாவும்

அத்தையும் "எங்கள் பெண்ணுக்கு என்ன செய்யணும், எப்படிச் செய்யணும் என்று எங்களுக்குத் தெரியும்; நீங்கள் ஒன்றும் கேட்கவேண்டாம்" என்று சொன்னார் களே யொழிய பிடி கொடுத்துப் பேசவில்லை.

மாணி: அவர்கள் இப்படிப் பேசும்போது எங்களுக் குத் தெரியாதா? 'சொத்து விஷயமாகத் திட்டமாக ஒன்றும் சொல்லாத வரையில், உங்கள் பெண்ணை அழைத்துக் கொள்வதில்லை' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டோம்.

திரிபுர: அப்படிச் சொன்னாலாயினும், அவர்கள் பயந்து வழிக்கு வருவார்களென்று பார்த்தால், வீராப் பாக அல்லவா இருந்து விட்டார்கள்?

துரை: உங்களுக்கு இவ்வளவு இருக்கும்போது அவர்களுக்கு ரோஷம் இல்லாமலா போய்விடும்?

மாணி: என்ன இருந்து என்ன? வயது வந்த பெண்ணை வாழா வெட்டியாக வீட்டில் வைத்துக்கொண் டிருக்கிறார்கள் என்று ஊரில் கண்டபடி பேசுவதைக் கேட்டுக்கொண்டும் சூடு சொரணையில்லாமல் இருக் கிறார்களே!

துரை: உங்களை மட்டும் யாரும் ஒன்றும் சொல்ல மாட்டார்களா? 'பாவம், ஒரு இளம் பெண்ணைக் கட்டி விட்டுப் பணத்துக்காக, கணவனுடன் வாழவிடாமல் வாட விடுகிறார்களே, பேராசைக்காரர்கள்' என்று எத்தனையோ பேர்தான் பலவிதமாகப் பேசுவார்கள்.

மாணி: நீ என்னதான் அவர்களுக்காகப் பரிந்து பேசினாலும், நாங்கள் மட்டும் விஜயத்தை நம் வீட்டுக்கு

வர வழைப்போம் என்று எண்ணுதே! நீ எங்கள் இஷ்டப்படி வேறு கலியாணஞ் செய்துகொண்டுதான் ஆகவேண்டும்.

துரை : அதெல்லாம் முடியாது. நீங்கள் என்ன தான் தலைகீழாக நின்ருலும், நான் வேறு ஒரு பெண்ணை விவாகஞ் செய்து கொள்ள இசைவேன் என்று மட்டும் எண்ணுதீர்கள். விவாகம் என்பது என்ன பொம்மை விளையாட்டு என்று நினைத்தீர்களா ?

மாணி : கற்ற கல்வியை யெல்லாம் என்னிடமே திருப்பிப் படிக்க வந்து விட்டாயா ? தம்பி.

திரிபுர : ராஜா, அப்பா பேச்சைத் தட்டாதே ! அவர் உனக்கு நன்மையைத்தானே செய்ய நினைக்கிருர். பணக்கார வீட்டுப் பெண்ணைப் பார்த்துக் கலியாணஞ் செய்துவைத்தால், பிற்காலத்தில் நீ சுகமாக வாழ்வாய் என்றுதானே அவர் இவ்வளவு பாடுபடுகிருர் ?

துரை : பணமும் நீங்களும். எனக்குப் பணமும் வேண்டாம் ; ஒன்றும் வேண்டாம் ; பணத்துக்காக ஒரு பெண்ணினுடைய வாழ்க்கையைப் பாழாக்க நான் விரும்பவில்லை......நீங்கள் தொந்திரவு செய்தீர்களாளுல் நான் எங்காயினும் போய்விடத்தான் வேண்டி வரும்.

மாணி : அட ; போயேன், பூச்சாண்டி காட்டு கிருயோ ! எங்கள் பேச்சைக் கேட்காதவன் போனுல் தான் என்ன ! இருந்தால்தான் என்ன ! நான் ஒன்றும், பிள்ளை போய் விட்டானே என்று கவலைப்பட மாட் டேன்.

துரை : நீங்கள் ஏன் கவலைப்படப் போகிறீர்கள்? பணத்தைக் பெரிதாகக் கருதுபவர்களுக்குப் பிள்ளை எங்கே பெரிதாகத் தெரியப் போகிறது? பணம்! பணம்! அந்தப் பணத்தை நீங்களே கட்டியழுங்கள், நான் போகிறேன்.

திரிபுர : ராஜா, ராஜா! எங்கே போகிருய்? அப்பா ஏதோ பேச்சுக்குச் சொன்னுல் இதற்கெல்லாமா கோபித்துக் கொள்வது? ராஜா இரு. நில், நில்.

மாணி : அட, நீ ஏன் இப்படிக் கதறுகிருய்? போனுல் போகிருன்? எங்கே போகப் போகிருன்? சுற்றியலைந்து விட்டு இங்கேதான் திரும்பிவரப் போகிருன்?

## காட்சி 2

**இடம் :** விழுப்புரம்.
**காலம் :** காலை.
**பாத்திரங்கள் :** விஜயம், பிரேமா.

பிரே : வா, விஜயா, வா! என்ன திடீர் விஜயமாயிருக்கிறதே!

விஜயம் : ஏன் வரக்கூடாதோ?

பிரே : வருவதாக ஒரு வரி எழுதிப் போட்டிருந்தால், நான் ரயிலடிக்கே வந்து அழைத்து வந்திருப்பேனே என்று சொன்னேன்.

விஜயம் : முதலில் இங்கு வருவதாக இல்லை. சென்னைக்குப் புறப்பட்டேன். போகும் வழியில், உன்

நினைவு வரவே இறங்கி உன்னைப் பார்த்துவிட்டு நாளை பட்டணம் போகலாமென வந்தேன்.

பிரே: அவ்வளவாயினும் நினைவு வைத்திருக்கிறாயே விஜயம், என்மீது. அதற்காக என் நன்றி.

விஜயம்: ஏன்? கல்லூரியை விட்டுப் போனதுமே மறந்து விடுவேன் என்று நினைத்தாயா? சில நாட்களாயினும் சகோதரிகள் போல் நாம் பழகினோமே! ஒரே கல்லூரியில் வாசித்து, ஒரே அறையில் வசித்துவந்த நாம் அந்த இன்ப நாட்களை அவ்வளவு சாமானியமாக மறந்துவிட முடியுமா?

பிரே: இந்தக் காலத்தில் பணம், அந்தஸ்து ஆகியவைகளை அனுசரித்துத்தானே சிநேகமும் சொந்தமும் இருக்கிறது? அதனால்தான் அப்படிச் சொன்னேன். உன்னைப்போல் உண்மை நண்பர்கள் ஒருவர் இருவராயினும் இருப்பதால்தான் இந்த நயவஞ்சக உலகில் வாழ முடிகிறது.

விஜயம்: நீ சொல்லுவது நூற்றுக்கு நூறு உண்மை. இந்தக் காலத்தில் கணவன், மனைவி உறவு கூடப் பணத்தின் மீதுதான் இருக்கிறது. பொன்னும் பொருளும் இல்லையானால், தாம்பத்திய வாழ்வுகூடக் கிடைக்காது.

பிரே: என்ன விஜயா, ஏதோ புதிர்போட்டுப் பேசுகிறாய்? விசேஷம் ஏதாயினும் உண்டா?—உன் முகமெல்லாம் ஏன் இப்படி வாடியிருக்கிறது? ஆமாம்; இப்போது எதற்காகப் பட்டணம் போகிறாய்?

விஜயம்: உத்தியோகம் பார்க்க.

பிரே: என்ன, தமாஷ் பண்ணுகிறுயா? விஜயா.

விஜயம்: இல்லை; உண்மைதான்.

பிரே: நீ உத்தியோகம் பார்க்கவேண்டிய அவசியம் என்ன வந்தது? என்னைப் போல் ஏழையா என்ன, நீ?

விஜயம்: உன்னைப் போல் ஏழையாயிருந்தால்தான் எவ்வளவோ நன்ருயிருக்குமே! ஏன், பிரேமா? நீ ஏழையா யிருப்பதற்காக வருந்துகிறுயா? வெட்கப் படுகிறுயா? என்ன!

பிரே: அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.

விஜயம்: அதுதான் கேட்டேன். பைத்தியக்காரத் தனமாகப் பணத்துக்கு ஆசைப்பட்டு என்னைப் போல் வாழ்க்கை யின்பத்தை யிழந்து அவதியுருதே.

பிரே: என்ன விஜயா, இவ்வளவு விரக்தியாகப் பேசுகிறுய்? என்னமோ நடந்திருக்கிறது போலிருக் கிறதே! என்ன விஷயம், சொல். உன் மனதிலிருந்து வாட்டிக் கொண்டிருப்பதைச் சொல்.

விஜயம்: சொல்லி என்ன பயன்? துயரந்தான் அதிகப்படும்?

பிரே: ஐயோ! உனக்கு என்ன நேர்ந்தது, சொல் லேன், விஜயா! உன் சோக நிலையைக் கண்டு என் நெஞ்சம் துடிதுடிக்கிறது.

விஜயம் : என் பெற்ருேரே எனக்கு விரோதிகளாக வாய்த்து விட்டனர். என் இன்ப வாழ்க்கைக்கு உலே வைத்து விட்டனர்.

பிரே : விஷயத்தை விவரமாகத்தான் சொல்லேன். விஜயா !

விஜயம் : என் கலியாண விஷயத்தைப் பற்றித்தான் உன்னிடம் ஏற்கனவே சொல்லி யிருக்கிறேனே ! அம்மான் மகனுக்கு வாழ்க்கைப்பட்டால், பெண்கள் ஆனந்தமாய் இருப்பார்கள் என்று சொல்வதுண்டு. ஆனுல் என் துரதிர்ஷ்டம் துக்கத்தையே அனுபவிக்க வைத்து விட்டது. நான் பி. ஏ. பரீட்சையில் நன்ருய் எழுதியிருப்பதால், நிச்சயம் பாஸ் செய்து விடுவேன் என்ற சந்தோஷ சமாசாரத்தோடு ஊருக்குப் போனேனு? ஆனுல் அங்கு நான் கலியாணப் பரீட்சையில் நிச்சய மாகத் தேறமுடியாது என்ற செய்தி எனக்குக் காத் திருந்தது.

பிரே : ஏன் ?

விஜயம் : மாமா தன் பிள்ளேக்கு வேறு கலியாணஞ் செய்ய முயன்றுகொண்டிருக்கிருர். அவர்கள் என்னேத் தங்கள் வீட்டுக்கு அழைத்துக் கொள்ள விரும்பவே யில்லே ; அடியோடு புறக்கணித்து விட்டார்கள்.

பிரே : இவ்வளவு ஆனபிறகும், உன் பெற்ருேர் விட்டுக்கொடுத்து அவர்களுடன் சமரசமாகப் போக முயலவில்லேயா ?

விஜயம் : இல்லே. ஒரே பிடிவாதமாயிருக்கின்றனர். தங்கள் பொய்க் கௌரவத்தை நிலேநிறுத்திக்கொள்ளத்

தங்கள் விருப்பைக் காட்ட—என்னை என் வாழ்க்கையைப் பணயம் வைக்கிறார்கள்.

பிரே : பெற்றோர் வீண் பிடிவாதத்தால் எவ்வளவு பெரிய தவறு செய்கின்றனர்?

விஜயம் : பிள்ளையோடு நானும் ஒரு பிள்ளையாய் இருந்துவிட்டுப் போகட்டும் என்கிறார்கள்; பெண்ணுள்ளத்தை நன்கு உணர்ந்திருந்தால் அவர்கள் இப்படிப் பேசுவார்களா? அது மட்டுமா! நான் வேறு யாரையாயினும் தேடிக் கொண்டாலும் பரவாயில்லையாம். அல்லது மாமியாரும் கணவனும் கொடுமையாக நடத்தியதாகக் கோர்ட்டில் பிராது செய்து எப்படியாயினும் அவர்களுடனிருக்கும் விவாகத் தொடர்பை அறுத்துக்கொள்ள வேண்டுமாம். சம்பந்தி வீட்டாருக்குத் தலைகுனிவை எப்படியாயினும் உண்டாக்க வேண்டுமென்று அவர்கள் கறுவுகிறார்கள். அவர்களுக்கு உண்டாகும் அவமானம் தங்களுக்குந்தானே என்பதை மயக்க உணர்ச்சியில் இவர்கள் உணரவில்லை. கடைசியாக, இவர்களுடைய மூட வைராக்கியத்துக்கு என்னைப் பலி கொடுத்து விடுவார்கள் என்றே தோன்றியது. அதற்காகத்தான் என் பெற்றோருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டு வெளியேறி விட்டேன்; பிரேமா!

பிரே : அப்புறம்?

விஜயம் : அப்புறம் என்ன? விதி போகும் போக்கில் போகத் தீர்மானித்து விட்டேன். என்னதான் கொடுமை செய்திருந்தாலும், கட்டின கணவனுக்கு எதிராக எதுவும் செய்ய நான் விரும்பவில்லை. அவனுக்குத் துரோகம் இழைக்கச் சிறிதும் எண்ணவில்லை.

பிரே : இவ்வளவு தூரம் பேசும் நீ ஏன் உன் கணவனை நேரில் கண்டு நிலைமையைக் கூறி உன்னை ஏற்றுக் கொள்ளச் செய்யக்கூடாது ?

விஜயம் : செய்யலாம். ஆனால் பல வருஷ காலம் என் பெற்றோர் பேச்சைக் கேட்டுக் கொண்டு அவருடன் பேசாமலிருந்த எனக்கு—அவரைக் காணாதிருந்த எனக்கு—இப்போது திடீரெனப் போய்ப் பார்த்து பேசத் துணிவேற்படவில்லை. என் பெற்றோர் தாங்கள் சொன்னபடி நடந்து கொள்ளாததால் அவரும் தம் பெற்றோரைப் போலவே என் மீது வெறுப்புக் கொண்டிருக்கலாம். அவர் என்மீது அன்பாயிருப்பார் என்று எப்படிச் சொல்ல முடியும்? இந்நிலையில் நான் எப்படி என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளும்படி அவரைக் கேட்க தைரியமுண்டாகும்? ஒரு வேளை அவர் பெற்றோர் சொற்படியே வேறொரு பெண்ணைக் கலியாணஞ் செய்து கொள்ள முற்படலாம். அல்லது யாரையாயினும் காதலிக்கலாம்.

பிரே : சே! அப்படி யெல்லாம் நினைக்காதே! அவரைப் பார்க்காமலே—அவருடைய கருத்தை அறியாமலே—நீ ஒரு முடிவுக்கும் வரக்கூடாது.

விஜயம் : அவசரப்பட்டு ஒன்றும் செய்யவில்லை. காலத்தை எதிர்பார்த்துப் பொறுத்திருக்கிறேன்.

பிரே : அதுவரை........?

விஜயம் : நான் முதலில் சொன்னபடி, சென்னப் பட்டினத்துக்குச் சென்று ஏதேனும் உத்தியோகம் செய்யலாமென முடிவு செய்திருக்கிறேன். அப்பா

அம்மா சொல்லிக்கொடுத்த படிப்பு இருக்கிறது இல்லையா ?

பிரே : சென்னையில் யாரைப் பார்க்கப் போகிறாய்? எங்கு தங்கப் போகிறாய் ?

விஜயம் : நம்ம பிரின்ஸ்பாலைப் பார்க்கப் போகிறேன். நான் ஆசிரியையாக வரவேண்டுமென்று அவர் அடிக்கடி சொல்லி வந்ததை நீயும் கேட்டிருக்கிறாயே ! ஆதலால் அவரைப் பார்த்து அவர் யோசனைப்படி ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பி. டி. க்கு படிக்கப் போகிறேன்.

பிரே : செய்யலாம். பிரின்ஸ்பால் கட்டாயம் உதவி செய்வார். அவருக்கு உன்மீது அன்பு அதிகம்.

விஜயம் : என்னவோ பார்க்கலாம். என் வாழ்க்கையில் விதி சதுரங்கமாடத் தொடங்கிவிட்டது. இனி நான் அதன் கழற்காய்தானே !

## காட்சி 3

**இடம் :** சென்னை.
**காலம் :** மாலை.
**பாத்திரங்கள் :** துரைராஜன், சுந்தரம்.

துரை : என்னத்தைப் பார்க்கிறது ?

சுந்தரம் : விதிதான் மனிதர்களை எப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறது ?

துரை : மனிதர்கள் செய்யும் வஞ்சனை, சதிச் செயல்களுக்கு விதி என்று பெயரா ?

சுந்தரம்: விதியோ சதியோ எதுவாயினும் இருந்து போகட்டும். அதுபற்றி இப்போது நமக்குள் சர்ச்சை வேண்டாம்.

துரை: நீ சர்ச்சை செய்ய விரும்பினாலும் நான் அதற்குத் தயாரில்லை.

சுந்தரம்: எதற்கும் நீ உன் மனைவியைப் பார்த்து அவளுடைய அபிப்பிராயம் என்ன என்று கேளேன். அவள் உன்னுடன் வாழ விரும்பியிருக்கலாமல்லவா? தன் பெற்றோரின் பிடிவாதப் பிடிக்குள் அகப்பட்டுத் தப்ப வழி காணாமல் இருக்கலாம்.

துரை: நீ சொல்வது நல்ல யோசனைதான். ஆனால் அவளைக் கண்டு பேசி அழைத்துவந்து தனிவாழ்க்கை நடத்துவது என்பது இப்போது முடியாத காரியம். நாங்கள் இளமையில் ஒன்று கூடியாடி வந்திருக்கிறோமே யொழிய, பெரியவர்களான பிறகு, நான் இதுவரை அவளுடன் பேசியதுமில்லை; சிநேகஞ் செய்துகொள்ள முயன்றதுமில்லை. அதற்குப் பதிலாக நான் என் பெற்றோர் பேச்சைக் கேட்டு, அவளை வெறுத்து வந்திருக்கிறேன். அவள்மீது கோபங்கொண்டிருக்கிறேன்.

சுந்தரம்: பெரியவர்கள் சண்டை போட்டுக் கொண்டால், நீங்களும் விரோதமாயிருக்க வேண்டுமா, என்ன!

துரை: இருக்க வேண்டிய அவசியமில்லைதான். ஆனால், நாங்கள் ஒருவரையொருவர் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் உண்டாக்கிக் கொள்ளத் தவறி விட்டோம்.

சுந்தரம் : போனது போகட்டும். இப்போதும் காலங் கடந்து விடவில்லை.

துரை : இல்லை ; எங்களிடையே நிலவியிருக்கும் கசப்புநிலை மாறுவதற்குச் சிறிது காலம் செல்லவேண்டும் நான் போய்த்திரும்பி வந்தபிறகு அவளுடன் கூடி வாழ முயல்வேன்.

சுந்தரம் : அப்படியானல், அடுத்து என்ன செய்யக் கருதி யிருக்கிறாய் ?

துரை : நான் விமானப்படையில் சேர்ந்து சேவை செய்யத் தீர்மானித்துவிட்டேன்.

சுந்தரம் : நம் நாட்டுப் பாதுகப்புக்குப் பாடுபட விரும்பினால் சிவில் சர்வீஸில் சேர்ந்துகொள்ளலாமே ! விமானப் படையில் நீ சேர்வது எனக்கு என்னமோ......

சுந்தரம் : உனக்கு பிடிக்காமலிருக்கலாம். எனக்கு அது மிகவும் பிடித்திருக்கிறது. இப்போது நேரே விமானப் படை இலாகாவுக்குத்தான் போகிறேன்.

## காட்சி 4

**இடம் :** டிரெயினிங் காலேஜ் ஹாஸ்டல் அறை.
**காலம் :** மாலை.
**பாத்திரங்கள் :** விஜயா, பிரேமா.

விஜயா : பிரேமா, நீ ஒருத்தியாயினும் என்னிடம் விசுவாசம் வைத்து, அடிக்கடி என்னை வந்து பார்த்து விட்டுப் போகிறாயே !......

பிரே : என்ன அப்படிச் சொல்லுகிறாய், விஜயா! ஏன் உன் குடும்பத்தார் கூடவா உன்னை வந்து பார்த்து விட்டுப் போவதில்லை ?

விஜயா ; (பெருமூச்செறிந்தவாறு) ஊஉம்.

பிரே : நீ வீட்டை விட்டு வெளியேறி வந்த பின்னர், அப்பா அம்மா யாரும் உன்னைத் தேடிக் கொண்டு வரவில்லையா ?

விஜயா : தேடி யிருப்பார்களோ என்னவோ ஆனால் அவர்கள் யாரும் இங்கு வரவில்லை.

பிரே : ஒருவேளை நீ இங்கு இருப்பது அவர் களுக்குத் தெரியாமலிருக்கலாம். இல்லையானால் பெற்ற பெண்ணைப் பார்க்காமல் விட்டுவிட்டிருப்பார்களா?

விஜயா : அது எப்படியோ இருந்து விட்டுப் போகட்டும். அதைப்பற்றி இப்போது எதற்குப் பேச்சு?

பிரே : ஆமாம், ஒன்று கேட்க வேண்டுமென்று நினைத்தேன். இதற்குள் மறந்து விட்டேன்.

விஜயா : என்ன அது?

பிரே : நீ இங்கு வந்த பிறகாவது உன் அகமுடை யானைப்பற்றி ஏதாயினும் தகவல் தெரியுமா? அவருடைய பெற்றோர் அவருக்கு இரண்டாவது கலியாணஞ் செய்து வைக்க முயன்று கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னாயே ? ஒருவேளை அப்படி ஏதாயினும் இதற்குள்......

விஜயா : நடந்திருந்தால்தான் என்ன! அதைப் பற்றிய கவலையெல்லாம் விட்டு எவ்வளவோ கால

மாயிற்று. பிரேமா! இந்தப் பேச்சையெல்லாம் விட்டு வேறு ஏதாயினும் பேசேன்.

பிரே : உன் கணவனைப் பார்க்க வேண்டுமென்று உனக்கு ஆசையுண்டாக வில்லையா?

விஜயா : ஆசையேற்பட்டுப் பயன் என்ன?

பிரே : விஜயா, எப்படிப் பெற்றோர் உற்றாரை மட்டுமல்லாமல், காதற் கணவனையும் உன்னால் மறந் திருக்க முடிகிறது?

விஜயா : மறந்திருக்க வேண்டிய நிர்பந்தத்திலிருக் கிறேன்.

பிரே : உன் மன உறுதியும் பொறுமையும் என்னைப் பிரமிக்க வைக்கின்றன.

விஜயா : இதுபோன்ற சந்தர்ப்பம் ஏற்பட்டால் நான் என்ன? எல்லோரும் இப்படித்தான் இருப்பார்கள்.

பிரே : மீண்டும் கல்லூரி வாழ்க்கை உனக்குப் பிடித்திருக்கிறதா?

விஜயா : தற்போதைய நிலையில் இது எனக்கு மனச்சாந்தியைத் தந்துகொண்டிருக்கிறது. மாணவி களோடு அளவளாவிப் பழகுகையில் என் சஞ்சலங்க ளெல்லாம் என்னை விட்டு விலகிப் போகின்றன.

பிரே : அப்படியா! ஆதரவற்றவர் களுக்கெல்லாம் ஆறுதலளிப்பது ஆசிரியத்தொழில் என்று இனி புது மொழி வழங்க வேண்டியதுதான்.

## காட்சி 5

இடம் : இராணுவ ஆஸ்பத்திரி.
காலம் : பகல்.
பாத்திரங்கள் : துரைராஜன், நர்ஸ்.

துரை: அம்மா, அப்பா! ஐயோ வலியாயிருக்குதே!

நர்ஸ் : ஐயா, சும்மா படுத்திரும். இதோ இந்த இன்ஜெக்ஷன் கொடுத்ததும்......வலி போய்விடும்.

துரை : இதென்ன, தலை கனமாயிருக்கிறதே !

நர்ஸ் : கையை அசைக்காதீர்கள். இன்ஜெக்ஷன் கொடுக்கப் போகிறேன். ஆடாமல் அசையாமல் இருந்தால் எல்லாம் சரியாய்விடும்.

துரை : தலையில் கட்டுக்கட்டியிருக்கிற மாதிரியல்லவா தோன்றுகிறது ? என்னால் ஒன்றையும் பார்க்க முடியவில்லையே !

நர்ஸ் : ஆம் ; கட்டுத்தான் கட்டி இருக்கிறது. சீக்கிரம் அவிழ்த்து விடுவார்கள்.

துரை : நான் எங்கு இருக்கிறேன் ?

நர்ஸ் : ஆஸ்...... (தயக்கத்துடன்)

துரை : நீங்க யார் ? நர்ஸ்ஸா ?

நர்ஸ் : ஆம் ; நான் நர்ஸ்தான்.

துரை : அப்படியானால்......

நர்ஸ் : ஆமாம் ; நீங்கள் ஆஸ்பத்திரியில்தான் இருக்கிறீர்கள்.

துரை : நான் ஏன் இங்கு வந்தேன் ?

நர்ஸ் : உங்கள் படை நடத்திய விமானப் போரில் எதிரி விமானம் வீசிய குண்டினால் உங்களின் விமானம் நொறுங்கிக் கீழே விழுந்தது ஞாபகமில்லையா ?

துரை : ஆமாம் ; ஆமாம். இப்போது தான் ஞாபகத்துக்கு வருகிறது. அப்படியானால் நான்.........

நர்ஸ் : நீங்கள் நல்ல காலமாக உயிர் தப்பினீர்கள் தலையில்தான் கொஞ்சம்......அதெல்லாம் சீக்கிரம் குண மாய்விடும். பயப்பட வேண்டாம்.

துரை : பயமா ? உயிரே போயிருந்தால்கூட நான் கவலைப் பட்டிருக்க மாட்டேன் ?

நர்ஸ் : அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். நீங்கள் உடம்பை மட்டுமல்ல ; மனதையும் அலட்டிக் கொள்ளக் கூடாது. அமைதியாயிருக்கவேண்டும். அதோ டாக்டர் வருகிறார்......

## காட்சி 6

**இடம் :** ஆஸ்பத்திரி
**காலம் :** மாலை
**பாத்திரங்கள் ;** துரைராஜன், நர்ஸ்.

நர்ஸ் : ஐயா, உங்களுடைய காயமெல்லாம் நன்றாக ஆறிவிட்டது. இன்று டாக்டர் வந்து கட்டை யவிழ்த்து விடுவார்.

துரை : அப்படியா ? நான் இனி எல்லாவற்றையும் பார்க்கலாம் ; முதலில், எனக்கு இவ்வளவு பரிவாக

சிகிச்சை செய்து வந்த உன்னையும் பார்க்கலாம் இல்லையா ?

நர்ஸ் : ஓ ! பார்க்கலாம் ; ஆனால்........?

துரை : ஆனால் என்ன ? சொல் ; தயங்காமல் சொல்.

நர்ஸ் : ஒன்றுமில்லை. ஏன் அப்படி பதட்டமடைகிறீர்கள் ?

துரை : ஒன்றுமில்லை யென்றால், ஏன் இவ்வளவு தூரம் பீடிகை போடுகிறாய் ?

நர்ஸ் : டாக்டர் சொன்னார்... ...

துரை : டாக்டர் என்ன சொன்னார் ?

நர்ஸ் : முகம் ஒருமாதிரியாக......

துரை : ஏன் மென்று விழுங்குகிறாய் ? சரியாகச் சொல்லேன். முகத்துக்கு என்னவாம் ?

நர்ஸ் : விமானம் அடிபட்டு விழுந்தபோது, தீப் பற்றிக் கொண்டு விட்டது. அதில், முகம் வெந்து போய்......

துரை : ஐயோ ! இந்த விகாரம் வேறா ?

நர்ஸ் : விகாரமா யிருக்குமென்று டாக்டர் சொல்லவில்லை.

துரை : காய வடு மாறாமலிருக்குமென்று சொன்னாரோ ?

நர்ஸ் : கட்டை அவிழ்த்துப் பார்த்த பிறகுதான் சொல்ல முடியும்.

துரை ; என்ன இருந்தாலும் முன்போல முகம் இருக்காது என்று சொல்லிவிடேன். ஏன் மழுப்புகிருய் ?

நர்ஸ் : ஆம், டாக்டர் அப்படித்தான் சொன்ஞர்.

துரை : ஐயோ, கடவுளே மனதுக் ; ஆறுதல் தேடிச் சென்ருல் மாரு வடுதான் முகத்தில் மிஞ்சியது. வேண்டும் எனக்கு; இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் ?

## காட்சி 7

**இடம் :** ஆஸ்பத்திரி

**காலம் :** மாலை

**பாத்திரங்கள் :** துரைராஜன், டாக்டர், நர்ஸ்.

நர்ஸ் : உடையெல்லாம் உடுத்திக்கொண்டு தயாராயிருங்கள்.

துரை : ஏன் ?

நர்ஸ் : இன்று நீங்கள் வீட்டுக்குப் போகலாமென்று......

துரை : வீட்டுக்குப் போகலாமா ?

நர்ஸ் : ஆம் ; காயமெல்லாம்தான் நன்ருய் ஆறிவிட்டதே !

துரை : காயம் ஆறி விட்டதுதான். ஆஞல் அந்த விகாரம் அழியாத காயமாய் விட்டதே ?

நர்ஸ் : இப்படியெல்லாம் ஏன் மனம் நொந்து பேசு கிறீர்கள் ? நீங்கள் அதிர்ஷ்டசாலியாயிற்றே ! தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்று சொல்வார் களே ! அந்தப் பழமொழி போல உயிருக்கு ஆபத்தில் லாமல் தலையில் சிறிது காயத்துடனும், முகத்தில் சிற்சில காயங்களுடனும் போயிற்று. எத்தனையோ பேர் இந்த மாதிரி யுத்தத்திலும், விபத்துகளிலும் கண்ணும், மூக்கும், கையும் காலும் இழந்து கஷ்டப்படு கிறார்கள் ? இந்த ஆஸ்பத்திரியிலேயே பார்க்கவில்லையா நீங்கள் ?

துரை : ஐயோ ! போதும் ஸிஸ்டர் ! உங்கள் ஆறுதல் மொழி எனக்கு ஆற்றாமையைத்தான் உண்டு பண்ணுகிறது.

நர்ஸ் : டாக்டர் வருகிற நேரமாச்சு இன்றைக் காவது உங்களைப்பற்றிய விவரங்களைத் தந்து விடுங்கள். இல்லாவிட்டால் ஆஸ்பத்திரியிலிருந்து சிறைச்சாலைக்குத் தான் அனுப்பவேண்டி நேரும் உங்களை.

துரை : தாராளமாக அனுப்புங்கள். எங்கிருந்தால் என்ன ?

நர்ஸ் : உங்கள் ஊர் பேரைக்கூடச் சொல்லமாட் டேன் என்கிறீர்களே !

துரை : ஊர் பேர் எதற்கு?

நர்ஸ் : உங்கள் அடையாளச் சீட்டும் விபத்தில் கெட்டுவிட்டது போலிருக்கிறது.

துரை : அது ஒன்றுதான் என் அதிர்ஷ்டம்,

நர்ஸ் : உங்களை எப்படி வெளியே அனுப்புகிறது ? எங்கே அனுப்புவது ?

துரை : எனக்கென ஓர் இடம் இருந்தால்தானே !

நர்ஸ் : உங்களுக்கு உற்ருர் உறவினர் யாரு மில்லையா ?

துரை : இப்பரந்த உலகத்தில் நான் ஒரு பஞ்சை ; அநாதை.

நர்ஸ் : நீங்கள் எப்போது பார்த்தாலும் விரக்தி யாகவே பேசுகிறீர்கள் ? திக்கற்றவராக இருப்பதால், தான் இப்படிப் பேசுகிறீர்களோ ! அல்லது.............. (டாக்டர் வருகிருர்.)

டாக்டர் : குட் மார்னிங்.........எப்படி யிருக்கிறது உங்களுக்கு. நாங்கள் செய்யக் கூடியது இனிமேல் ஒன்றும் இல்லை.........ஊருக்குப் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்.........மனதை வேலையில் எதிலாவது திருப்புங்கள்......எல்லாம் சரியாகி விடும்.

துரை : சொல்வது எவ்வளவு எளிதாக இருக் கிறது ?

டாக்டர் : ஒன்றும் கஷ்டமில்லை......இந்த ஆஸ் பத்திரியில் இருக்கும் வரை உங்களுக்கு நோய் ஞாபக மாகவே இருக்கும்.........வெளியே போனல்.........!

துரை : மனதுக்கு வெளியேது ? உள்ளேது ?

டாக்டர்: அப்படிப் பேசக்கூடாது...இதோ உங்கள் டிஸ்சார்ஜ் சர்டிபிகேட், பாஸ்போர்ட், டிபார்டேஷன்

பேப்பர்ஸ், டிக்கட்ஸ். சந்தோஷமாகப் புறப்படுங்கள். உற்சாகம் வேண்டும், பூராவாகச் சொஸ்தம் அடைய... நான் வருகிறேன்......பெஸ்ட ஆப் லக்......(டாக்டர் போகிறார்.)

துரை : வந்தனம். (டாக்டர் கொடுத்துச் சென்ற தாள்களை ஒவ்வொன்றாகப் பிரித்துப் படிக்கிறான்.) எம். வி. ராம். நீல்கிரீஸ், மெட்ராஸ். சவுத் இண்டியா ........ (நிமிர்ந்து) நர்ஸ் ! நர்ஸ் !

நர்ஸ் : என்ன ?

துரை : இந்தப் பெயரும் விலாசமும் யார் கொடுத்தது ?

நர்ஸ் : நான்தான்... தப்பா ?

துரை : இல்லை......நான் இதற்காக நன்றியல்லவா செலுத்த வேண்டும் ?...ஆனால், எனக்காக ஏன் இவ்வளவு சிரமம்......?

நர்ஸ் : சிரமம் என்ன ?...ஒரு அநாதை இன்னொரு அநாதைக்கு இது கூடச் செய்யக்கூடாதா ?

துரை : நீ கூட என்னைப்போலத் தானா ? உனக்கும் துயரமா ?

நர்ஸ் : (மௌனம்)

துரை : எவ்வளவு சகிப்புத் தன்மை...?

நர்ஸ் : யுத்தத்தில் உயிர் நீத்த என் சிநேகிதன் ஒருவன் ஞாபகார்த்தமாக...

துரை : சிநேகிதனா ?

நர்ஸ் : இனி அவனைக் காதலன் என்று சொல்லி என்ன பயன் ?

துரை : ஐயோ......!நாம் பிறந்தது இவ்விதம் ஏமாற்றமும் துயரமும் அனுபவிப்பதற்குத் தானு ?

நர்ஸ் : (மௌனம்)

துரை : அதிருக்கட்டும். இந்தப் பெயரும் விலாசமும்......?

நர்ஸ் : ராம்......உங்கள் இந்தியாவில் பொதுவாக வழங்கும் பெயர்தானே !

துரை : ஆமாம். ஊர் நீலகிரி என்று குறிப்பிட்டிருக்கிருயே ! எத்தனையோ ஊர்களிருக்க நீலகிரியை...

நர்ஸ் : என் சிநேகிதி ஒருத்தியும் நர்ஸ். அவள் கொஞ்ச காலம் நீலகிரி மிலிட்டரி ஆஸ்பத்திரியில் வேலை பார்த்து வந்தாள். அந்த ஊர் பெயர் ஞாபகம் வந்தது......அது அழகான இடம் இல்லையா ?

துரை: அழகானதென்று சொல்கிருர்கள்; போய்ப் பார்க்க வேண்டும்......எம். வி. ராம்.

நர்ஸ் : இப்போதாவது உங்கள் உண்மைப் பெயரைச் சொல்ல மாட்டீர்களா ?

துரை : முருகவேள்...... நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருந்த காலத்தில் நான் எங்கள் குலதெய்வம் முருகனை வழிபட்டு வந்தேன். அவன் திருநாமமே என் பெயராயிருக்கட்டும்.

நர்ஸ் : அந்தப் பெயர் என் வாயில் நுழையாது. போய் வாருங்கள் ; ராம் ! நாமில்லாவிட்டால் உலகம் ஒன்றும் ஆகிவிடாது. உலகம் இல்லாவிட்டால் நாம் ஏது ? இது ஞாபகமிருக்கட்டும், ராம்......போய் வாருங்கள்.

(துரைராஜன் சிந்தனையோடு வெளியேறுகிறுன்.)

## காட்சி 8

**இடம் :** கல்லூரி

**காலம் :** காலை

**பாத்திரங்கள் :** விஜயா, கோகிலா.

கோகிலா : நீங்க பிரின்ஸ்பாலுக்குப் பலமாகச் சிபார்சு செய்ததால்தான், அம்மா ! நான் சீமை சென்று படித்துப் பட்டம் பெற்று வர, சர்க்கார் ஸ்காலர்ஷிப் கிடைத்தது? உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன், அம்மா !

விஜயா : என் சிபார்சு என்ன? நீ நன்ருகப் படித்து இங்கேயே பல பட்டங்களும் பரிசுகளும் பதக்கங் களும் வாங்கியிருப்பதால், கல்லூரித் தலைவி உனக்கு உபகாரச் சம்பளம் தரும்படி அரசாங்கத்துக்கு அழுத்த மாக எழுதியிருக்கிருர்.

கோகி : சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டுமல்லவா !

விஜயா : நீ சொல்கிறபடியே நான் உதவி செய்திருந்தாலும், இது என் கடமையல்லவா! தன் மாணவிக்கு ஒரு ஆசிரியை இதுகூடச் செய்யவில்லையென்றால்........

கோகி : எல்லா ஆசிரியைகளுமே உங்களைப்போல் கடமையுணர்ச்சி யுடைவர்களாயிருந்தால், மாணவ உலகம் எவ்வளவோ முன்னேறி விடுமே! அதுதானே இல்லை. உங்களுடைய நற்குணம், பெருந்தன்மை, போதனு சக்தி.....

விஜயா : என்ன கோகிலா, என்னை ஓரேயடியாகப் புகழத் தொடங்கி விட்டாயே! அப்புறம்......

கோகி : இல்லாததைக் கூறி முகஸ்துதி செய்யவில்லையே! எங்க அண்ணுகூட உங்களைப் பற்றிப் பேசத் தொடங்கும் போதெல்லாம் எவ்வளவு சொல்லுகிறர், தெரியுமா? நீங்க அஸிஸ்டெண்டாயிருந்து லெக்சரராய் வந்ததைப் பார்த்தே, மற்ற ஆசிரியைகள் பொருமைப் பட்டது எனக்குத் தெரியுமே! நீங்க காலேஜ் ஹாஸ்டலுக்கும் வார்டனுக நியமிக்கப்பட்ட சமாசாரம் எனக்குத் தெரியாதா? இதற்கு எவ்வளவோ எதிர்ப்பு இருந்தும், பிரின்ஸ்பால் ஒரே பிடிவாதமாயிருந்து அப்பதவியை உங்களுக்குக் கொடுக்கவில்லையா? எங்க அண்ணு...

விஜயா ; (சிரித்துக் கொண்டே) உங்க அண்ணு பேச்சையா பிரமாதமாகச் சொல்லுகிறுய்?

கோகி : எங்க அண்ணு சாமானியமாக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.

விஜயா : அப்படிப் பட்டவரா என்னைப் பற்றி இல்லாதது பொல்லாததெல்லாம் சொல்லி வானளாவப் புகழ்கிறர்?

கோகி : புகழ்வதற்கு இடமிருப்பதால்தான் புகழ்கிறார். உண்மையாகவே எங்க அண்ணாவுக்கு......

விஜயா : இந்த ஆண்கள் சமாசாரம் உனக்குத் தெரியாது. அவர்களுக்கு ஒருவரைப் பிடித்துவிட்டால் வானத்து உச்சியில் வைத்து வருணிப்பார்கள். பிடிக்கவில்லை யென்றால், படுபாதாளத்தில் தள்ளி விடுவார்கள். எனக்கு ஏதோ அதிர்ஷ்டம். தன் தங்கையின் அன்புக்குப் பாத்திரமான ஆசிரியை என்றதனால் அவருடைய பாராட்டுக்குப் பாத்திரமாய் விட்டேன்.

கோகி : நீங்கள் ஏனோ......எப்போதும் பட்டதும் படாததுமாக விட்டு விடுகிறீர்கள் ? உங்கள்மீது அண்ணாவுக்கு......

விஜயா : எனக்கு எல்லாம் தெரியும். சொன்னாலும் புரிந்துகொள்ளாமல் ...போயும் போயும் உங்க அண்ணா பாலைவனத்து முட் செடிக்குத் தண்ணீர் ஊற்றி வளர்க்கிறார்.

கோகி : (நகைத்தவாறு) தொட்டால் குத்திவிடும் என்கிறீர்களா ?

விஜயா : பாலைவனத்தில் முட்செடிகூட முளைப்பது அருமை என்று சொல்லுகிறேன்...ஒருமுறை அணைந்து போய்விட்ட விளக்கை மீண்டும் ஏற்ற முயல்வது வீண் வேலை.

கோகி : காற்றினால் விளக்கு அணைந்து போய் விட்டால் மீண்டும் ஏற்றுவதில்லையா ?

விஜயா : இந்த விளக்கில் திரியுமில்லை; எண்ணெயுமில்லையே ! எப்படி எரியும் ?

கோகி : என்னென்னவோ சொல்லுகிறீர்களே, அம்மா ?

விஜயா : அது உனக்கு இப்போது புரியாதுதான். முதலில் நீ போய் ஏட்டுக் கல்வியைப் படித்து முடித்து விட்டு வா. பின்னுல் வாழ்க்கைப் படிப்பைத் தெரிந்து கொள்ளலாம்.

கோகி : நீங்க புதிர் போட்டுப் பேசும் அந்த மர்ம வாழ்க்கைப் படிப்பு எனக்கு வேண்டவே வேண்டாம்.

விஜயா : இப்போது அப்படித்தான் சொல்வாய். பின்னுல் நீயே அதைத் தெரிந்துகொள்ளத் துடிதுடிக்கப் போகிருய்; ஜோடி சேர்த்துக் கொள்ளப் போகிருய்.— அது போகட்டும், நீ சீமைக்குப் போய் நன்ருகப் படித்து பெரும் புகழோடு திரும்பி வர வேண்டும். நம் நாட்டுக்குப் பெருமையளிக்கப் படித்து வரும் உன்னை வரவேற்க நாங்கள் பெருமிதத்தோடு காத்திருப்போம்.

கோகி : உங்கள் நல்லெண்ணமும் வாழ்த்தும் இருந்தால் போதும்......புகழும் பெயரும் தாருக வரும்.

## காட்சி 9

**இடம் :** சென்னை

**காலம் :** பிற்பகல்

**பாத்திரங்கள் :** துரைராஜன், சுந்தரம்.

சுந்த : என்ன இருந்தாலும் மனிதனுக்கு இப்படி கஷ்டங்கள் அடுத்தடுத்து வரப்படாது. பட்ட காலிலே

படும், கெட்ட குடியே கெடும் என்பது உன் விஷயத்தில் எவ்வளவு உண்மையென்று தெரிகிறது, துரை.

துரை : துரையா? துரை யார்?...அவன் போய் எத்தனை காலம் ஆகிவிட்டது !

சுந்த : (ஆச்சரியமாக)அப்படியா?

துரை : ஆம்; நான் அனுபவிக்க வேண்டியதை அனுபவித்துத்தானே யாகணும்?

சுந்த : கடவுள் கருணையே உருவானவன் என்று சொல்லுகிறார்களே! பெரியோர்களும் பெருநூல்களும். அந்த அருளாளன்தானே எள்ளளவும் கருணையின்றி இவ்விதம் உன் விஷயத்தில் காரியஞ் செய்திருக்கிறான்?

துரை : கடவுளேயோ மற்றவர்களேயோ நோவதில் யாதொரு பயனுமில்லை. நான் வந்த வழி இது?

சுந்த : நீ என்னதான் சொன்னாலும் உன் முகத்தைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஆத்திரம்தான் அதிகரிக்கிறது. உன்னை இந்தக் கதிக்கு ஆளாக்கியவர்களுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் தகும்!

துரை : எனக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய நீயே இப்படிப் பேசிக்கொண்டு போனால்......!

சுந்த : உனக்கு ஏற்பட்டிருக்கும் கோரத்தைக் கண்டு எனக்கே தாங்கவில்லையென்றால், பெற்ற தாய் பார்த்தால் எப்படித் துடிதுடிப்பாள்? உன் பெண்டாட்டி கண்டால் என்ன வருத்தமடைவாள்?

துரை : அவர்களுக்கு அந்தக் கஷ்டத்தை வைக்க மாட்டேன். மறுபடியும் நான் தாய் தந்தையர், மனைவி முதலியோர் முகங்களில் விழிப்பதாக உத்தேசமில்லை.

சுந்த : அப்படியானால் இந்த நாடகத்தை உண்மையாக நடித்து முடிக்கப்போகிருயா... ?

துரை : நாடகம் என்னை முடித்துவிடும் வரை......

சுந்த : வெறுப்பும் கசப்பும் தோழர்களா ? உன் கோபம் உன்னையே தகித்துத் தின்றுவிடத் தனிமையில் தவமா ?

துரை : மனத்தடுமாற்றமின்றி எதைச் செய்தாலும் அது தவம்......கூட்டத்தில் வாழமுடியாத எனக்குத் தனிமைதான் தாரம் ?

சுந்த : எங்கு போகப் போகிருய் ?

துரை : அதை நிர்ணயிக்க நான் மிகவும் கஷ்டப்பட்டிருப்பேன். ஆனல் ஒரு சிநேகிதர் யோசனை கூறி உதவினர்......நீலகிரியில்.

சுந்த : ஊட்டிக்கா ? ...கூனூருக்கா ?

துரை : இல்லை...நீலகிரி காட்டுக்கு நடுவே ஒரு...

சுந்த : (சிரித்தவாறு) ஏன் தவம் செய்யவா ?

துரை : காட்டுக்குப் போனல் தவம்தான் செய்ய வேண்டுமா? நிம்மதியாக நீலகிரிக்கிராமம் ஒன்றில் மண்ணோடு மண்ணாக வாழப் போகிறேன். என்னிடம் கொஞ்சம் பணமிருக்கிறது. மாதா மாதம் பென்ஷன் வேறு வரும். சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் காப்பாற்றினேனல்லவா ? அதை வைத்துக் கொண்டு கவலையின்றிக் காலட்சேபம் நடத்தலாம் என்று எண்ணம்.

சுந்த : இதுதான் உன் முடிவா ?

துரை : வேறு விதமாக முடிவு பண்ணுவதற்கு என்ன இருக்கிறது?

## காட்சி 10

இடம் : கல்லூரி வகுப்பு
காலம் : காலை
பாத்திரங்கள் : விஜயா, மாணவிகள்.

விஜயா : வேதாந்தத்துக்கும் இலக்கியத்துக்கும் என்ன சம்பந்தம்? நான் சொல்வது வேதாந்தமல்ல; இலக்கியம்தான். இலக்கியம் சில சமயங்களில் வாழ்க்கையைப் பிரதிபலித்துச் சித்தரிக்கிறது. வாழ்க்கையில் வேதாந்தம் இருந்தால் அது இலக்கியத்திலும் புகுந்து விடுகிறது. மேலும் மனிதன் மனதில் எழும் சிந்தனைகளும் குழப்பங்களும் தானே இலக்கியத்தில் உருப் பெறுகின்றன. ஒரு ஆசிரியன் இந்த உலகத்தில் நம்மால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. நம்மையறியாமல் நம் அறிவாற்றல்களுக்குமேல் அப்பால் ஏதோ ஒரு பெருஞ் சக்தி யிருந்து காரியங்களை நடத்திவருகிறது என்று எழுதினுல் அவை அவன் எண்ணங்கள். வெறும் வேதாந்தமல்ல. மேலும் யோசிக்கிருன்; யோசிக்க யோசிக்க, "நாம் செய்கிறோம். நம்மால்தான் எல்லாம் ஆகிறது" என்பதெல்லாம் வெறும்பிரமைஎன்று தோன்ற ஆரம்பிக்கிறது. உலகின் இயக்கம் யாவும் சந்தர்ப்பச் சேர்க்கையால் நிகழ்வது என்பதும் பூரண திருப்தியை அளிக்கமாட்டேன் என்கிறது. கவியின் கற்பனை இப் பௌதீக உலகிற்கும் இங்கு இயங்கும் சக்திகளுக்கும்

உலகத்திற்கு வெளி... அல்ல... உள்ளத்தின் உள்ளே ...உணர்வுக்கு அடியே, காரணம், அர்த்தம் தேடிச் செல்கிறது. கவி தேடுவது தான் மெய்ப்பொருள் அறிவு நிலை.........

ஒரு மாணவி: பின் சாதாரண ஆஸ்திக வழி பாட்டுக்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

விஜயம்: ஒன்று சமயம், இன்னொன்று வேதாந்தம். ஒன்று நம்பிக்கை; இன்னொன்று உணர்வு. மெய்ப் பொருள் அறிவு நிலை என்பதே இதை விளக்குகிறது.

(காலேஜ் பெல் அடிக்கிறது)

விஜயா: சரி; மணியாய் விட்டது சாப்பிடப் போவோம். அடுத்த பாடத்தில் இதைப் பற்றித் தொடர்ந்து படிப்போம்.

(மாணவிகள் போகின்றனர். விஜயம் பெரு மூச்சு விட்டவாறு நிற்கிறாள்.)

## காட்சி 11

**இடம்:** நீலகிரி கிராமம்

**காலம்:** பகல்

**பாத்திரங்கள்:** துரைராஜன், வேலைக்காரி முத்தம்மாள்.

துரை: (தனக்குள் எழுதினதைப் படிக்கத் தொடங்கி) இருட்டு நம் நண்பன். பார்வைதான் நம் துரோகி. கோரத்தையும் அழுக்கையும் விரசத்தையும் விகாரத்தையும் மூடிவைக்கும் இருட்டை வணங்கு

கிறேன். விளக்கேற்றி இவை யாவையும் நமக்குக் காண்பிக்கும் பார்வையை பழிக்கிறேன். எனக்கு அறிவு வேண்டாம், அறிந்து அறிந்ததைச் சீராக்க முடியாத முண்ட அறிவு வரமல்ல. சாபம்.........

முத் : எஜமான், சாப்பிட நேரமாயிட்டுதுங்களே!

துரை : ஊம்.

முத்: என்ன இது; 'ஊம்' கொட்டிட்டு மறுபடியும் எழுத ஆரம்பிச்சுட்டிங்களே !

துரை : என்ன முத்தம்மா, இப்படித் தொந்தரவு பண்ணத் தொடங்கிவிட்டாய்? எனக்குப் பசியெடுத்தால் நான் சாப்பிட வர மாட்டேனு ? நீ கூப்பிட வேணுமா, என்ன !

முத் : உங்களுக்குத்தான் பசி, தூக்கமுன்னு கிடையாதுங்களே ! வேளா வேளைக்குச் சாப்பிடா விட்டா, உடம்பு என்னத்துக்கு ஆகும் ? எப்பப் பார்த் தாலும் எழுதிக்கிட்டும், தானே பேசிக்கிட்டும் இருந்தா?

துரை : நீதானே முந்தியெல்லாம், சும்மா குந்திக் கிட்டுக் கெடக்கா தீங்க, எங்காச்சியும் சுத்திபிட்டு வாங்க ......ஏதாச்சும் படியுங்க என்று சொன்னுய் ? நான் படித்தால் என்ன ? எழுதினுல் என்ன ? முத்தம்மா, நீ போய் சாப்பிடு; போ.

முத் : நீங்க சாப்பிடறதுக்கு முன்னையா ? அது முடியாதுங்க......

துரை : இது என்னடா கஷ்டகாலம்...நீ எனக்கு வேலே செய்யப் போறையா ? நான் நீ சொல்றதைக் கேட்டு நடக்கணுமா ?

முத் : நீங்க இப்படி சரியான வேளையிலே சாப்பி டாமே தூங்காமே இருந்தா உடம்பு கெட்டுல்ல போயிடும் ?

துரை : அதைப்பற்றி எனக்குத் தெரியும் ?

முத் : உங்களுக்கு என்னத்தே தெரியும் ? இங்கே வந்த புதிசிலே......கதவைப் பூட்டிக்கிட்டு அறைக் குள்ளற குந்திக்கிட்டுக் கெடந்தீங்க. அன்னிக்கு மழைக் காக நான் இங்கே ஒதுங்காட்டி நீங்க வேலைக்குக் கூட ஒருத்தரையும் வச்சிண்டிருக்க மாட்டீங்க.

துரை : சரி ; நீ வேலைக்கு இல்லா விட்டால் எனக்கு ரொம்பக் கஷ்டம் தான். நீ ரொம்ப நன்றாக வேலை செய்கிறாய்.

முத் : பின்னே என்னுங்கறேன். படிச்ச மனுசங் களே இப்படித்தானோ என்னவோ ! பைத்தியம் பிடிச் சுடும் போலிருக்கு.

துரை : சரி, முத்தம்மா, உன் பிரசங்கம் போதும் ; வா ; சாப்பிடலாம்.

## காட்சி 12

**இடம் :** நீலகிரி கிராமம்.
**காலம் :** காலை.
**பாத்திரங்கள் :** துரைராஜன், முத்தம்மாள்,

முத் : எஜமான் நான் ஒண்ணு கொண்ணாந்திருக் கேன்.

துரை : என்ன பழமா ?......இல்லே ; திரும்பி கஷாயமா ?

முத் : பழம் கசக்குதோ உங்களுக்கு. சளி பிடிச்சா கஷாயம் குடிக்காட்டி என்ன ஆவது......?

துரை : சரி, இப்ப எது......?

முத் : இரண்டுமில்லே.

துரை : பின்னே......

முத் : தபால்.

துரை : தபாலா......?

முத்: எனக்கு கடுதாசி வராது, எனக்கு ஒருத்தரும் கிடையாதுன்னு ஏமாத்தப் பார்த்திங்களே...இதோ...

துரை : இரண்டு கடுதாசி...ஒரு பத்திரிகை......

முத் : அவ்வளவுதான், எசமான்...

துரை : போதாதா ? இது கலாவல்லி பத்திரிகாசிரியரிட மிருந்தல்லவா வந்திருக்கிறுப் போலிருக்கிறது. (கடிதத்தைப் பிரித்துக்கொண்டே) முத்தம்மா, பால் இருந்தால் கொஞ்சம் காபி போட்டுக் கொடேன்...

முத் : இதோ கொண்டாறேன்......எசமான்......

துரை : ஏன், இங்கேயே நின்னுக்கிட்டு இருக்கிறே...?

முத் : இல்லிங்க...

துரை : என்ன, முத்தம்மா ?

முத் : கடுதாசியை பிரியுங்களேன்...

துரை : ஏன் ?

முத் : உங்க மொகத்திலே நான் சந்தோஷத்தைக் கண்டதே யில்லே. நீங்க சிரிச்சு நான் பார்த்ததேயில்லே.

துரை : இன்னொரு நாளேக்கு......போ ; காப்பி கொண்டுவா...

(முத்தம்மாள் போகிருள்.)

துரை : (அவள் செல்வதையே பார்த்தவாறு) இந்த அத்துவானத்திலே வீட்டிலே இருக்கிற ஒரு பிராணியும் ஒரு சவமாஞல் கஷ்டமாகத்தான் இருக்கும். பாவம்...ஊம் !......ஆசிரியர் வேதாசலமேதான் எழுதி யிருக்கிருர், என்ன என்று பார்ப்போம்.

கவிஞர் முருகவேளுக்கு வணக்கம். சில நாட்களுக்கு முன் தாங்கள் எழுதியனுப்பியிருந்த 'வெட்ட வெளியில்' என்ற கவிதை இவ்வார 'கலாவல்லி'யில் பிரசுரமா யிருக்கிறது. இதழ் அனுப்பியுள்ளோம் தனித்தபாலில். எங்கள் நன்றி.

தாங்கள் அனுப்பியிருக்கும் இரண்டு கதைகளும் இன்னொரு கவிதையும் வரப்பெற்ருேம். புது எழுத் தாளர்களுக்கும், புது சோதனேகளுக்கும் இடமளிக்கவே கலாவல்லி சேவைபுரிகிறது. நீங்கள் புது எழுத்தாளரோ, புதுப் புனேபெயரில் எழுதும் பழைய எழுத்தாளரோ எனக்குத் தெரியாது. ஆஞல் உங்கள் கற்பனே யாவும், புதுமை ! புதுமை ! புதுமை ! உங்கள் முயற்சியை பாராட்டுகிருேம் ; புகழுகிருேம்.

ஒரே ஒரு வேண்டுகோள். எந்தப் பத்திரிகையும் பொதுமக்கள் ஆதரவைப் பெற்றே வளர வேண்டும் ;

வாழவேண்டும். அவர்கள் விருப்பு வெறுப்புகளை மனத்தில் வைத்து எழுத்தாளர் தம் கற்பனை ஆர்வத்தை பண்படுத்திக் கொள்ளவேண்டும். தாங்கள் முயன்றால் இன்னும் எவ்வளவோ அழகான — ரம்மியமான — மணமான கவிதைகளும், கதைகளும் எழுதமுடியும். அவைகள் யாவற்றையும் பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.

இப்படிக்கு,
**வேதாசலம்...**
ஆசிரியர் 'கலாவல்லி.'

அழகான ! ரம்மியமான ! மணமான ! எவ்வளவு நாசூக்காகச் சொல்லிவிட்டார். என் எழுத்தில் அழகும் ரம்மியமும் மணமும் இல்லை... ஆனால் நான் அழகு இருக்கிறது என்று சொன்னேனா ? எங்கிருக்கிறது எழில் ? வெறும் கண் மயக்கம். ரம்யம் ! மணம் ! வாழ்க்கையின் நாற்றம் மூக்கைத் துளைக்க மணம் நிறைந்த போலிக் கற்பனைகள் எழுதிக் குவிக்க வேண்டுமா ?... அவர்களைச் சொல்லி என்ன பிரயோஜனம் : என்னை 'யார் எழுதச் சொன்னார்கள் ? எழுதினாலும் காகிதத்தை முத்தம்மாளுக்கு அடுப்பு பற்றவைக்கக் கொடுத்துவிட்டு சும்மா இருக்கக்கூடாதா ?

முத் : எஜமான், இதோ காபி கொண்டாந்துட்டேன், குடியுங்கோ ஆறிப் போறத்துக்குள்ளே...

துரை : கொண்டு வா இப்படி.

முத் : என்னுங்க கடுதாசி. ஊரிலே எல்லாரும் சொகந் தானுங்களா ?

துரை : இல்லை முத்தம்மா...எங்க ஊரிலேயிருந்து இல்லை. நான் சொல்கிறதை...நம்பு. எனக்கு ஒருத்தரும் கிடையாது.

முத் : நானிருக்கேனே...

துரை : ஆமாம்; நீயிருக்கிறாய். உனக்கு நான். எனக்கு நீ. வா; கொஞ்சம் வெளியே சுற்றிவிட்டு வரலாம்...

முத் : என்னுங்க, இந்தக் கடுதாசி பிரிக்கவே இல்லீங்களே!

துரை : வேண்டாம்.

முத் : சரி; பிரிச்சுப் பாருங்க...

துரை : சரி; நீயே பிரி...

முத் : இந்தாங்க.

துரை : இது யார்? யாரோ ஒரு பெண் எழுதியிருப்பது போலல்லவா இருக்கிறது? கடிதத்தைப் பார்த்தால். பெயர் என்ன விஜயலக்ஷ்மி தேவியா? அது யார்? எனக்கு முன்பின் தெரியாதே. இந்தப் பெயரைக் கேள்விப்பட்டதுகூட இல்லையே......?

(கடிதத்தைப் படிக்கிறான்.)

முருகவேள் அவர்களுக்கு,

நமஸ்காரம். முன்பின் அறிமுகமில்லாத நான் உங்களுக்கு கடிதமெழுதுவதற்காக முதலில் மன்னியுங்கள். 'கலாவல்லி'யின் வாசகர்களில் நானும் ஒருத்தி. இவ்வார இதழில் உங்கள் கவிதை ஒன்றைப் படித்தேன். மிகவும் பிடித்திருந்தது என்று சொல்ல முடியவில்லை... உங்கள் கற்பனை பிடித்திருப்பதற்காக உருவெடுத்தவை

யல்ல என்று நினைக்கிறேன். பிடித்தில்லாவிட்டால் இக்கடிதம் ஏன் என்று கேட்கிறீர்களோ ? ஏனோ எழுத வேண்டுமென்றிருந்தது ; எழுதுகிறேன். எனக்குப் பிடித்திருக்கிறது என்று சொல்ல முடியாத உங்கள் கவிதைகளை இன்னும் மேலும் மேலும் படிக்க ஆர்வம் ஏனோ என்னைப் பிடுங்கி எடுக்கிறது.

இப்படிக்கு,
**விஜயலக்ஷ்மி.**

(சிரித்து) அட, என்னைப் போன்றே இன்னொரு பைத்தியமும் இந்த உலகத்தில் இருக்கிறதே......!

முத் : கேட்டேனுங்க.

துரை : என்ன ! என்ன கேட்டாய் ?

முத் : நீங்க சிரிச்சதை...இந்தக் கடுதாசி பிடிச்சிருக்குதுங்களா ?

துரை : பிடித்திருக்கிறது. ஆனால்......இவளுக்கு ஒரு பதில் எழுதிப்போட வேண்டுமே.

முத் : எழுதுங்களேன்...

துரை : மனிதத் தொடர்பே எனக்கு வேண்டாமென்றாலும் தப்ப முடியவில்லை.

முத் : இப்ப தப்பவும் இஷ்டமில்லை போலிருக்கே.

துரை : போ......போக்கிரி......

## காட்சி 13

**இடம் :** நீலகிரியும், சென்னை நகரும்.
**காலம் :** பகல்
**பாத்திரங்கள் :** துரைராஜன், விஜயலக்ஷ்மி.

(கடிதம் எழுதுகிறான்.)

துரைராஜன் :

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி தேவிக்கு,

வணக்கம். உங்கள் கடிதத்திற்கு என் நன்றி. இங்கிதமில்லாத என் வரட்டுக் கவிதையை வேண்டா வெறுப்பாகவேனும் வரவேற்பளிக்கும் உங்களை என் உண்மைச் சிநேகிதையாகவே மதிக்கிறேன். நீங்கள் படித்ததுதான் என் முதல் பிரசுரம். ஆசிரியருக்கும் அது பிடிக்கவில்லை. அழகாக, ரம்மியமாக, மணமாக எழுதக் கோரியுள்ளார். அது என்னால் முடியாது. என் மனதில் இருப்பதைத்தானே என்னால் எழுத முடியும். என் மனதில் அழகில்லை. என் சிந்தனைகள் ரம்யமானவை யல்ல. என் நினைவுகள், கருகிய மலர்கள், மணம் வீச வில்லை. ஆனால், என் கவிதைகளையும் கதைகளையும் படிக்க உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால் அது என் முயற்சிக் குறைவால் அல்ல என்பதைச் சொல்லிவிடுகிறேன். ஒரு வேளை என் எழுத்துக்கள் ஏதேனும் வெளிவந்தால் அவ்வப்போது அபிப்பிராயம் எழுதி வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
**முருகவேள்.**

(காட்சி மாற்றம்)

விஜயம் :

உண்மைக் கவிஞர் முருகவேள் அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் கடிதங் கண்டு மகிழ்ச்சியுற்றேன். எழுதுங்கள் ; எழுதாமல் விட்டு விடுங்கள். பாதகமில்லை. ஆனால், தயவு செய்து அழகையும் ரம்மியமானதையும்,

மணத்தையும் தேடி அலைந்து இலக்கிய விபசாரம்மட்டும் செய்யாதீர்கள். உங்கள் எழுத்துக்கள் பிரசுரமாகா விட்டாலும் படிக்க நான் காத்திருப்பேன். தபால் இலாகா இன்னும் இலக்கிய தணிக்கை மேற்கொள்ள வில்லை என்பதை ஞாபகமூட்டுகிறேன். சந்தர்ப்பம் அளித்தால் தங்கள் கட்டளைப்படி அடிக்கடி கடித மெழுதுகிறேன்.

**விஜயலக்ஷ்மி.**

(காட்சி மாற்றம்)

துரை :

லக்ஷ்மி அவர்களுக்கு,

பயப்படவேண்டாம். ஆசிரியர் என் கவிதை களையும் கதைகளையும் இன்னும் திருப்பி அனுப்பவில்லை. பிரசுரித்தும் விட்டார். உங்கள் மொழிகள் இருண்டு போயிருந்த என் உள்ளத்தில் ஒளியை யேற்றி வைப் பனவா யிருக்கின்றன. மாணவிகளுக்கு அறிவு புகட்டும் ஆசிரியையான நீங்கள் எனக்கும் பேராசிரியையாய் விட்டீர்கள். உங்கள் பொன் மொழிகள் எனக்குப் புத்துணர்ச்சி தருகின்றன.

அன்புள்ள,

**முருகவேள்.**

(காட்சி மாற்றம்)

விஜயம் :

அன்பார்ந்த நண்பருக்கு,

தாமதத்துக்கு மன்னியுங்கள். உடனடியாகக் கடிதம் எழுத முடியவில்லை. உங்களுடைய புகழ்ச்சி

மொழிகள் எனக்குப் பூரிப்பளிக்கின்றனவாயினும் நான் அவற்றிற்கு அருகதையானவளா என்று எண்ணும் போது வெட்கமே யுண்டாகிறது. இப்போது உங்கள் கவிகளிலும் கதைகளிலும் ஒருவிதக் கனிவும் பூரணமும் காணப்படுகின்றன. இப்படியே எழுதுங்கள். ஆனால், இனியும் நான் என் அபிப்பிராயம் தெரிவிப்பது அநாவசியம். ஊரறிந்த எழுத்தாளர் ஆகிவிட்டீர்கள். இனி நான் எதற்கு ?

**லக்ஷ்மி.**

(காட்சி மாற்றம்)

துரை :

லக்ஷ்மிக்கு,

விமர்சகர் என்ற ஹோதாவில் உற்சாகம் அளிப்பதற்காக வேண்டாம். நண்பர் என்ற பதவியிலிருந்து ராஜிநாமா செய்து விடாதீர்கள்......எழுதுங்கள்........ எழுதிக்கொண்டே இருங்கள்...என் கவிகளில் ஏற்பட்டிருக்கும் உருக்கத்துக்கும் மாறுதலுக்கும் நீங்கள்தான் காரணம்.

**முருகவேள்.**

## காட்சி 14

**இடம் :** மதுரை.
**காலம் :** மாலை.
**பாத்திரங்தள் :** வாசகர்கள்.

ராமு : (பத்திரிகையைப் படித்துக்கொண்டே) அடடா ! எப்படி பாடியிருக்கான்டா ! சோமு ! இந்தப் பாட்டைப் பார்த்தையா ?

சோமு : இல்லையே ! அதைப் படி ; கேட்கலாம்.

ராமு : கவியுள்ளத்தைக் கவிதானே அறிய முடியும் ? முருகவேள் பாடியிருப்பதைப் படிக்கிறேன், கேள்.

“ நாட்டினர் தம் வறுமையெலாம்
பறக்கவேண்டும்
நலங்குன்ற வரும்நிலைகள்
தொலைய வேண்டும் :
எட்டினுறு கல்வியெல்லாம்
பயில வேண்டும் ;
இருள்நீங்க வேண்டும்உளம்
யாவர் மாட்டும் ;
மீட்டுபல தொழில் அறிவு
வேண்டும் ; இங்கே
மிகப்பலவாய் எப்பொருளும்
மல்க வேண்டும் ;
நாட்டுநிலை வாழ்க்கைத்தரம்
உயர வேண்டும் ;
நாமெல்லாம் மனிதர்களாய்
வாழ வேண்டும்.”

சோமு : மனித சமுதாயத்துக்கு இன்று தேவையாகவுள்ள அனைத்தையுமல்லவா, இப்பாட்டில் பாடியிருக்கிறான் ?

* * *

கோபால் : ‘ சிந்தாமணி ’யில் முருகவேள் எழுதியிருக்கிற சிறு கதையைப் படித்தாயா ! ‘ மனிதனும் மாயையும்’ என்ற அக்கதை மகா அற்புதம்.

சிவசாமி : நான் முன்னமேயே படித்து விட்டேனே. தீ விபத்தின்போது தேசபக்தன் ஒருவன் உள்ளத்தில் எழுந்த பேராசைத் தீயைப்பற்றி மிக அழகாகச் சித்திரித்திருக்கிறார்.

கோ : ஆமாம். முருகவேள் என்பது யாருடா? எந்த ஊராம்? இது உண்மைப் பெயரா அல்லது......

சிவ : அவரைப் பற்றிச் சரியாகத் தெரியவில்லை. பத்திரிகாசிரியர்களைக் கேட்டால் சொல்லமாட்டேனென் கிறார்கள்.

கோ : நான்கூட அப்படித்தான் கேள்விப்பட்டேன். அவரே தன்னைப்பற்றி யாருக்கும் சொல்லவேண்டாம் என்று கண்டிப்பாகக் கூறியிருக்காராம்.

*   *   *

**பத்திரிகை விமர்சனம்**

இக்கவிதைத் தொகுதியில் வந்திருக்கும் கவி ஒவ் வொன்றும் கரும்பின் கணுக்கள் போல் தித்திக்கின்றன. முருகவேள் மகாகவி என்பதை இக்கவிதைகள் பறை சாற்றுகின்றன.

*   *   *

**பேப்பர் விற்கும் பையன்**

'கலைமணி' நாலணு! முருகவேள் எழுதிய 'மாந் தோப்பு' என்ற கதையைப் படித்துப் பாருங்கள்.

*   *   *

இலக்கியக் கழகக் கூட்டத்தில் ஒரு சொற்பொழி வாளர் :

நவீனத் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது, முருகவேள் செய்துவரும் இலக்கிய சேவையைக் குறித்துக் கூறுமலிருக்க முடியாது. அவர் இயற்றியுள்ள கவிதைகள், கதைகள் நம் இலக்கியக் கருவூலத்தில் பத்திரமாகச் சேமித்து வைக்கத்தக்க கலைப் பொக்கிஷமாகும்.

## காட்சி 15

**இடம் :** நீலகிரி கிராமம்
**காலம் :** மாலை
**பாத்திரங்கள் :** துரைராஜன், முத்தம்மாள்.

முத் : எசமான், நான் ஒன்னு கேட்கிறேன், கோவிச்சிக்க மாட்டீங்களே !

துரை : ஏது முத்தம்மா ! பீடிகை பலமாயிருக்கிறது. பணம் கிணம் ஏதாயினும் வேணுமா ? அல்லது சம்பளம் அதிகம் வேணுமா ?

முத் : அதெல்லாம் இல்லை, எசமான். நீங்க எனக்கு இப்பக் கொடுக்கற சம்பளமே அதிகமாச்சே ! நான் கேட்பனு ?

துரை : பின்னே என்ன கேட்கப் போகிறுய் ?

முத் : நீங்க இங்கே வந்து பத்து வருஷத்துக்கு மேலாச்சுங்களே! உங்களைத் தேடிக்கிட்டும் யாரும் வர்றதில்லை. நீங்களும் எங்கேயும் போவமாட்டீங்கறீங்க. உங்களுக்கு யாரும் மனுஷாள் இல்லைங்களா ? உங்களுக்குச் சொந்த ஊருன்னு ஒன்னும் கிடையாதா ?

துரை : (சிரித்துக்கொண்டே) அட! என்ன முத்தம்மா! இவ்வளவு நாளாக இல்லாமல், என்னைப் பற்றி ரொம்பக் கவலைப்படத் தொடங்கி விட்டாய்?

முத் : ஏதோ நினைச்சேன் ; கேட்டேன், எசமான். கேட்டது தவறுன்னு மன்னிச்சிக்கங்க.

துரை : இதில் ஒன்றும் தவறில்லை, முத்தம்மா. நான் ஒரு அநாதை. எனக்கு வீடு வாசலோ உற்றார் உறவினரோ கிடையாது.

முத் : அப்போ, என்னைப்போலத்தானுங்களா?

துரை : ஓ! நீயும் அப்படித்தானா? அதுதான் இனம் இனத்தோடு சேர்ந்திருக்கிறது.

முத் : எனக்கு மனுஷாள் இருந்தாகூட உங்களை விட்டு நான் போவமாட்டேங்க.

துரை : அட! ஏன்?

முத் : உங்களை எனக்குப் பிடிச்சுப் போயிட்டுதுங்க. உங்களுக்கு வேலை செய்யறதுலே எனக்கு எம்பிட்டுச் சந்தோஷம் இருக்குது, தெரியுங்களா?

துரை : சரி; சரி. நீ போய் உன் வேலையைப் பாரு. போ!

முத் : ஏன், எசமான்? நான் பேசறது உங்களுக்குப் பிடிக்கலேங்களா?

துரை : அதெல்லாம் இல்லை. நான் கொஞ்சம் எழுதணும். அதனால்தான்......

முத் : சரிங்க ; ஏதோ தோணிச்சு......

துரை : என்ன தோன்றிற்று?

முத் : கொஞ்ச நாளா நீங்க கடுதாசிங்கள்ளே ரொம்ப உசிரா யிருக்கீங்க......ஒரு வேளே இதெல்லாம் உட்டுட்டு ஊருக்குப் புறப்பட்டு விடுவேங்களோன்னு...

துரை : நினைச்சையா ?.......ஏன் உனக்குப் போகணும்னு இருக்கா ?

முத் : இல்லவே இல்லிங்க...உங்களுக்கு இந்த ஊரும்.. நானும் சலிச்சுப் போயிட்டுதோன்னு பயந்தேனுங்க........

துரை : முத்தம்மா, பயப்படாதே !...........நான் எங்கே போனாலும் இங்கேதான் திரும்பிவருவேன்........

முத் : நானும் இங்கேயே காத்துகிட்டுக் கிடப்பேனுங்கோ........(கண்களில் நீர் ததும்புகிறது.)

துரை : அசடே !.......என்னத்துக்கு அழறே....! போ....வேலையைப் பார்....

முத் : கோவம் இல்லிங்களே.......

துரை : கோவம் எதற்கு ? உன் அன்பிற்கா ?....

## காட்சி 16

**இடம் :** நீலகிரி கிராமமும், சென்னை நகரும்.
**காலம் :** முற்பகல்.
**பாத்திரங்கள் :** துரைராஜன், விஜயலக்ஷ்மி.

துரை : (தனக்குத்தானே தனி மொழியாக) என் நிலையை மறந்து ரொம்ப தூரம் போய்விட்டேனே ! கலியாணமான நான் முன்பின் அறியாப் பெண்ணொருத்தி

யோடு கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளலாமா? அவளைப் பார்த்துப் பேச விரும்பலாமா ?

விஜயம் : (தனிமொழி) அடடா ! என்னை யறியா மலே எவ்வளவு பெரிய தவறு செய்து வருகிறேன் ?

(காட்சி மாற்றம்)

துரை : அவள் யாரோ ? எந்த ஊரோ ? எங்கோ கல்லூரியாசிரியையாக இருப்பதாகக் கடிதங்களிலிருந்து தெரிகிறதே யொழிய, உண்மையில் அவள் எப்படிப் பட்டவளோ! கட்டின பெண்டாட்டியை விட்டு வேருெரு மங்கையைக் கலியாணஞ் செய்ய முடியாதென்றுதானே நான் வீட்டை விட்டு வெளியேறினேன் ? எதிர்பாராத கஷ்ட நஷ்டங்களுக்கெல்லாம் ஆளானேன் ?

விஜயம் : முருகவேள் எழுதும் கவிதை, கதைகள் நன்ருயிருந்தால், அதற்காக அவர்மீது இவ்வளவு தூரமா உள்ளம் ஈடுபடுவது ?

(காட்சி மாற்றம்)

துரை : மறுபடியும் குடும்பத்தில் சேர விருப்ப மில்லாமல்தானே ஜனசஞ்சார மில்லாத இம்மலைப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறேன். என் உண்மைப் பெயரையும் இருப்பிடத்தையும் பிறர் அறிந்து கொள் ளாமலிருக்கவேண்டுமென்றுதானே முருகவேள் எனப் புனைபெயர் வைத்துக் கொண்டேன். 'கலாவல்லி' ஆசிரியர் வாயிலாகத்தான் கடிதப் போக்குவரத்து இருக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்திருக்கிறேன் ? இவ்வளவு முன்னெச்சரிக்கையா யிருந்து கடைசியில் ஏமாந்து போவதா ?

விஜயம் : இந்தத் தொடர்புகளே இப்படித்தான். எங்கோ கொண்டுபோய் விட்டுவிடுகின்றன. இந்தச் சிநேகத்தால் யாருக்கு என்ன லாபம் ?

(காட்சி மாற்றம்)

துரை : அப்படித்தான் விஜயலக்ஷ்மி தேவியைப் பார்க்கப் போகிறேன் என்று வைத்துக்கொள்வோம் ; நான்தான் முருகவேள் என்முல் நம்புவாளா? என் விகார ரூபத்தைப் பார்த்தால் விரும்புவாளா ? என் கதை, கவிதைகளைப் படித்துத் தன்உள்ளத்தைப் பறிகொடுத்து நான் இப்படி இப்படி இருப்பேன் என்று உருவகப் படுத்தி வைத்திருக்கும் அவள் என்னை நேரில் கண்டதும் அடியோடு அல்லவா வெறுப்பாள் ?

விஜயம் : நான் ஏற்கனவே ஒருவனுக்கு உரிமை யாய் விட்டவள். அப்படி யிருக்க, இன்னொருத்தனை மனத்தாலுங்கூட நினைக்கலாமா ? சே ! சே ! அவரைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையை விட்டு விடவேண்டும்.

(காட்சி மாற்றம்.)

துரை : ஆதலால், கடித மூலமாக ஏற்பட்டு வரம்புமீறி வளர்ந்துவிட்ட இச் சிநேகத்தை இத்துடன் கத்தரித்து விடவேண்டும். ஆமாம்; அதுதான் சரியான வழி.

விஜயம் : கடிதங்கள் எழுதுவது கூடச் சரியல்ல.

## காட்சி 17

**இடம் :** சென்னை மகளிர் கல்லூரி.
**காலம் :** மாலை.
**பாத்திரங்கள் :** விஜயா, பிரேமா.

விஜயா : பிரேமா, உன்னிடம் சொல்வதற்கென்ன! நான் என்னென்ன விதமாகவோ முயற்சி செய்கிறேன்; அவரை மறக்க. முடிய மாட்டேனென்கிறதே! நான் என்ன செய்வேன்?

பிரேமா : முருகவேள் யார், எந்த ஊர் என்று உனக்குத் தெரியுமா?

விஜயா : அதெல்லாம் கண்டுபிடிக்க முடியவில்லை. 'கலாவல்லி' ஆசிரியர் மூலமாகத்தான் இதுவரை எங்களிருவருக்கும் கடிதப் போக்குவரத்து.

பிரேமா : வேடிக்கையாகத்தான் இருக்கிறது. விஜயா? ஒருவரை யொருவர் பார்க்காமலே, இன்னு ரென்று தெரியாமலே இவ்வளவு ஈடுபாடா? காணுமலே காதல் என்கிறுர்களே! இப்படித்தான் இருக்கும்போலும்.

விஜயா : காதல் என்று கருதிக் கனவு காணவில்லை நான். கணமும் மறவாமல் அவரையே நினைத்துக் கொண்டிருக்கும் என் மனத்தைக் கட்டுப்படுத்த முடிய வில்லையே என்றுதான் வருந்துகிறேன்.

பிரேமா : பூர்வ ஜன்மத் தொடர்பா யிருக்க வேண்டும்; அல்லது இரத்தபாசமா யிருக்கவேண்டும்.

விஜயா : பரிகாசம் செய்யாதே, பிரேமா!

பிரேமா : சே! பரிகாசம் செய்கிறேனு? நன்னெறி யில் நிலைத்திருக்கும் உன் உள்ளம் இவ்விதம் அவர்பால் செல்வதற்கு நியாயமே யில்லை என்று சொல்ல வந்தேன்.

விஜயா : என்னமோ! எனக்கே வியப்பாகத்தான் இருக்கிறது. இவ்வளவு காலம் உறுதி தளராமலிருந்த நான் இனிமேலா மாறுவது? அவரைப் பார்க்க முயல்வ

தில்லை எனத் தீர்மானித்துவிட்டேன். அவருக்குக் கடிதமெழுதுவதைக் கூட நிறுத்திவிட்டேன். ஆனால், பத்திரிகைகளில் அவர் எழுதிவரும் கவிதைகள், கதைகளை மட்டும் விடாமல் படித்து வருகிறேன். அவைதாம் வேதனை நிரம்பிய என் மனதுக்கு ஆறுதலையளித்து வருகின்றன.

பிரேமா : நீ சதுரங்கம் விளையாடுவதுண்டா?

விஜயம் : நீ பகடியடித்துப் பேசுவது இன்று எனக்குப் பிடிக்கவில்லை.

பிரேமா : இல்லை......அதில் கழற்காய்கள் என்ன நினைக்கின்றன என்று யோசித்துப் பார்த்தேன்.

## காட்சி 18

**இடம் :** நீலகிரி கிராமம்.
**காலம் :** முற்பகல்.
**பாத்திரங்கள் :** துரைராஜன், பத்திரிகாசிரியர் வேதாசலம்.

வேதா : நீங்கள் எப்படியும் வரத்தான் வேண்டும். நீங்கள் வரவில்லையானால் எங்கள் கலைவிழா சிறக்காது.

துரை : நான் இந்தமாதிரி கூட்டம், விழாக்களிலெல்லாம் கலந்துகொண்டு நெடுநாளாய் விட்டது. என் மனம் அமைதியைத்தான் விரும்புகிறது.

வேதா : விழாவுக்கு ஒருமுறை வந்துவிட்டுப் போவதால், உங்கள் நிம்மதி கெட்டுவிடாது. நாங்கள் உங்களுக்கு அதிகச் சிரமங் கொடுக்கமாட்டோம்.

துரை : எனக்குப் பாராட்டு, சீராட்டு என எதுவும் செய்யக்கூடாது. வெற்றுரவாரத்தையும் வீண் புகழ்ச்சியையும் என் மனம் விரும்புவதில்லே. அவ்விதம் நீங்கள் உறுதி கூறுவதானுல் நான் வருகிறேன்.

வேதா : உலகப் புகழ் பெற்ற உங்களே நாங்கள் பாராட்டவாவது! அதெல்லாம் இல்லே. கலேவிழாவில் நீங்கள் தலேமை வகித்து, நாங்கள் நடத்திய இலக்கியப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளே வழங்க வேண்டும்.

துரை : நீங்கள் இவ்வளவு தூரம் வற்புறுத்திக் கூப்பிடும்போது மறுக்க எனக்கு மனம் வரவில்லே.

(வேதாசலம் போகிருர்.)

முத் : (துரைராஜனே நோக்கி) நீங்க பட்ணத்துக்குப் போறீங்களா ?

துரை: முத்தம்மா, இன்னுமா பயம் தெளியவில்லே? சந்தேகம் போகவில்லே ? எத்தனே தடவை சொல்லியிருக்கிறேன் : எங்கு போனுலும் எவ்வளவு தூரம் போனுலும் இங்கேதான் திரும்பிவருவேன்........

முத் : நான் என்ன சொன்னேனுங்கோ....? நானும் இங்கேயேதான் காத்துக்கிட்டுக் கிடப்பேன்.

## காட்சி 19

**இடம் :** 'கலாவல்லி' காரியாலயம்

**காலம் :** மாலே.

**பாத்திரங்கள் :** துரைராஜன், வேதாசலம், பரிசு பெறுவோர், பொதுக்கூட்டம்.

துரை : கலாரஸிகர்களே! 'கலாவல்லி' கலை இலக்கிய உலகுக்குச் செய்து வரும் சேவையை நீங்கள் நன்கு அறிவீர்கள். இப்பத்திரிகையின் நிர்வாகிகள் இது போன்றே ஆண்டுதோறும் கலைவிழா நடத்திக் கலையுள்ளம் படைத்த இளைஞர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். இன்று பரிசு பெற்றவர்கள் இலக்கிய திருப்பணியில் ஈடுபடவேண்டும். இத்தகைய திருவிழாவில் என்னையும் பங்கு கொள்ளச் செய்த ஆசிரியர் வேதாசலத்துக்கும் உங்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

கடைசியாக, குமாரி இந்திரா சில நிமிஷங்கள் கலை வளர்ச்சி குறித்த தமிழ் பாடல்கள் சிலவற்றைப் பாடுவாள். அமைதியாக இருந்து கேட்டு இன்புறுவீர்களாக.

குமாரி இந்திரா பாடுகிறாள் :

**பாட்டு 1**

**பல்லவி**

அருள் புரிவாய் அம்மா! கலை—வாணியே! நீயே!
அருள் புரிவாய் அம்மா!

**அநுபல்லவி**

புவன நாயகி பூதல மேத்தும்பரை
தவன நாயகி தயாபரி தேவிநீ! (அ)

**சரணம்**

சகல கலைகளுக்கும் தற்பரம் பொருளே!
சதுர்வேத ஞானமும் தருபவள் நீயே!
இகபர சுகந்தனை ஈந்தருள் பவளே!
இங்கித மாய்இசை மிழற்றும் என் தாயே! (அ)

பாட்டு 2

பல்லவி

மறவாதே மனமே !—கலைதனை
மறவாதே மனமே !—

அநுபல்லவி

இகபர சுகந்தரும் இதயத்துக் கிதந்தரும்
விகசித மாகநல்ல விழுமிய பொருள்தரும் (ம)

சரணம்

கலைதனைக் கற்றிட்டால்
கனம் தரும் அருள்தரும்
குணந்தரும் பலந்தரும்
கோடியாம் பொருள்தரும்
விலைமதிப் பில்லாத
விஞ்ஞான மதிதரும்
வாழ்க்கைக்கு வளம் தரும்
வையக மெல்லாம்தரும் (ம)

## காட்சி 20

**இடம் :** ஆசிரியர் வேதாசலம் வீடு.

**காலம் :** பகல்.

**பாத்திரங்கள் :** துரைராஜன், விஜயா, வேதாசலம், உதவியாசிரியர்கள் முதலியோர்.

வேதா : அண்ணு, உங்களைப் பார்க்கவேண்டுமென்றும், நேரில் பேசி அளவளாவ வேண்டுமென்றும் எங்கள் உதவியாசிரியர்களும் நண்பர்களும் விரும்பினர்.

அதனுல்தான், கலைவிழாவை யொட்டி இந்த விருந்தையும் ஏற்பாடு செய்தேன்.

துரை : நான் என்ன அப்படி அபூர்வமான மனிதன் ; என்னை எல்லோரும் பார்க்கவேண்டுமென்று விரும்புவதற்கு......? காட்டில் வாழ்வதால் விசித்திரப் பிரகிருதியா யிருப்பேன் என்ற எண்ணமோ ?

வேதா : அப்படி சொல்லாதீர்கள்., உங்கள் பெருமை உங்களுக்குத் தெரியாது. 'முருகவேள்' என்ருல் உயிரை விடும் ரசிகர்கள் எவ்வளவோ பேர் இருக்கிருர்கள்.

துரை : பைத்தியக்காரர்கள். இந்த விகார சொரூபத்தைப் பார்க்க உயிரைவிட வேண்டுமா, என்ன !

வேதா : அப்படி யெல்லாம் பேசாதீர்கள். ஒன்றும் தெரியாதவர்கள்தாம் வெளித்தோற்றத்தையும் அழகையும் பிரமாதமாகக் கருதுவார்கள். அறிவாளிகளுக்கு அகத்தின் அழகுதான் முக்கியம்.

துரை : நீங்கள் இவ்வளவு தூரம் பேசுவதால் கொஞ்சம் யோசிக்கவேண்டியிருக்கிறது.

வேதா : (அங்கு சூழ்ந்திருந்தவர்களில் விஜயலக்ஷ்மியை சுட்டிக் காட்டி) இந்த அம்மையார்தாம் விஜயலக்ஷ்மிதேவி.

விஜயா : வணக்கம்.

துரை : யாரு, (யோசனையோடு) விஜயலக்ஷ்மி தேவி யா ?

வேதா : ஆம்.

துரை : எங்கோ கேள்விப்பட்டமாதிரியிருக்கிறதே!

வேதா : (சிரித்துக்கொண்டே) எங்கே கேள்விப் பட்டிருக்கிறீர்கள் ?

துரை : சமயத்தில் ஞாபகம் வரவில்லை.

வேதா : உங்களுடைய கதை, கவிதைகளைப் படித்துவிட்டு அடிக்கடி பாராட்டுக் கடிதங்கள் அனுப்பு பவர்களில் இவர்கள் முக்கியமானவர்கள். அவர்க ளுடைய கடிதங்களை உங்களுக்கு அனுப்பியிருக்கி றேனே ! ஞாபகமில்லையா ?

துரை : ஆம்; ஆம். இப்போது ஞாபகம் வருகிறது. ஆசிரியையாயிருக்கிறுர்கள், இல்லையா ?

விஜயா : ஆம்; இந்திராணி மகளிர் கல்லூரியில்....

வேதா : பேராசிரியையா யிருக்கிறுர்கள். கலை இலக்கியங்களில் நல்ல பரிச்சயமுடையவர்கள்.

துரை : மறந்தேயில்லை........அவர்தாஞ இவர் என்று........உணர்ச்சி வசப்பட்டு அடையாளம் அறியா மல் உளறிவிடக் கூடாதல்லவா ?

விஜயம் : (சிரித்தவாறே) உணர்ச்சி வசப்படக் கூடாதுதான்.

வேதா : அம்மா, கவிஞரைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் சொல்லவேண்டியதில்லை என்று எண்ணு கிறேன்.

விஜயா : உலகப் பிரசித்தி பெற்றவர்களைப்பற்றி என்ன சொல்ல முடியும் ?

துரை : உங்களுடைய புகழ்ச்சிக்கு நான் சிறிதும் அருகதை யற்றவன்.

வேதா : பெரியவர்க ளெல்லாம் இப்படித்தான் அடக்கமாகக் கூறிக்கொள்வார்கள்.—சரி; நீங்கள் பேசிக் கொண்டிருங்கள். விருந்து தயாராய் விட்டதா என்று பார்த்துவிட்டு ஒரு நொடியில் வருகிறேன்.

துரை : சரி; போய் வாருங்கள்.

(வேதாசலம் போகிறார்.)

விஜயா : இதுவரை கடித மூலமாகவே அறிந்திருந்த உங்களை நேரில் கண்டு அளவளாவும் சந்தர்ப்பம் கிடைத்தது என் அதிர்ஷ்டந்தான்.

துரை : இதில் என்ன அதிர்ஷ்டம் இருக்கிறது? நாம் சந்திப்பதற்குச் சந்தர்ப்பமுண்டாக்கிக் கொடுத்த ஆசிரியருக்குத்தான் நன்றி சொல்லவேண்டும். உங்களைக் காண நேர்ந்தது எனக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியைத் தருகிறது.

விஜயா : நீங்கள் இப்படி இருப்பீர்களென்று நான் கனவிலும் எண்ணவில்லை. என் உள்ளம் உங்களைப் பற்றி என்னென்னவோ கற்பனை செய்துகொண்டிருந்தது.

துரை : பார்க்க அருவருக்கும் கோர ரூபத்துடன் நான் இருப்பேன் என்று நீங்கள் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள் அல்லவா ?

விஜயா : நான் அதைச் சொல்லவில்லை. இவ்வளவு எளிமையாக இருப்பீர்களென்றும் எல்லோரிடமும் சகஜமாகப் பழகுவீர்கள் என்றும் நான் எண்ணவில்லை என்பதையே குறிப்பிட்டேன். நீங்கள் அடிக்கடி ஏன் உங்கள் முகத் தோற்றத்தைப்பற்றிப் பேசுகிறீர்கள்?

துரை : என்னிடம் உள்ள குறைபாட்டைச் சொல்லித்தானே ஆக வேண்டும்? மறைத்து வைத்தால் மாறி விடுமா?

(வேதாசலம் வருகிறார்.)

வேதா: வாருங்கள், அண்ணா, போவோம். விருந்து தயாராய் விட்டது. எல்லோரும் எழுந்திருங்கள்.

துரை : அம்மா, போவோமா ?

விஜயா : போவோம்.

## காட்சி 21

**இடம்** ; கல்லூரி ஹாஸ்டல்.

**காலம்** : காலை.

**பாத்திரங்கள்** : துரைராஜன், விஜயலக்ஷ்மி.

விஜயா : வாருங்கள்; வாருங்கள். எங்கே வராமல் போய்விடுகிறீர்களோ என்று நினைத்தேன்.

துரை : வாக்கு கூறிவிட்டு வராமலிருப்பேனா? மாலை ஊருக்குப் போவதற்குள் உங்களைப் பார்த்து விட்டுப் போகவேண்டுமென்றே தீர்மானித்திருந்தேன்.

விஜயா : இன்றே ஊருக்குப் புறப்பாடா? என்ன அவ்வளவு அவசரம்? இன்னும் நாலைந்துநாள் இருந்து போகலாமே!

துரை : இருப்பதற்கில்லை. இன்னொரு முறை வருகிறேன்.

விஜயா : உங்கள் வருகை எனக்குப் பெருமகிழ்ச்சி யளித்திருக்கிறது. நேற்றுத்தான் நாம் நேரில் சந்தித்துப் பேசினாலும், நீண்டகாலம் ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழகியவர்கள் போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டிருக் கிறது.

துரை :

" புணர்ச்சி பழகுதல் வேண்டா ; உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும் ''

என்று வள்ளுவர் பெருமான் கூறியிருக்கிறார் அல்லவா! எனக்கும் உங்களை இதற்குமுன் எங்கோ பார்த்தது போன்ற பிரமை தட்டுகிறது. நேற்றிலிருந்து நினைத் துக்கொண்டே இருக்கிறேன், எங்கே பார்த்திருப்போ மென்று......

விஜயா ; உங்களுடைய சொந்த ஊர் எதுவென நான் அறியலாமோ ?

துரை : ஆகா, தாராளமாக, திருச்சிராப்பள்ளி. உங்களுக்கு ?

விஜயா : திருநெல்வேலி.

துரை : திருநெல்வேலியா ? உங்களுக்குத் தாய் தகப்பனார்கள்......?

விஜயா : இருக்கிறார்கள்.

துரை : சகோதர சகோதரிகள் எத்தனை பேர் ?

விஜயா : ஒரே ஒரு தம்பிதான்.

துரை : உங்களுக்குக் கலியாணம்........?

விஜயா : ஊம். (மௌனம்.)

துரை : அடடா ? நான் முட்டாள்தனமாகக் கேள்வி கேட்டு உங்களுக்குச் சங்கடத்தை உண்டு பண்ணி விட்டேன் போலிருக்கிறதே!

விஜயா : அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்களுக்கு விவாகமாயிருக்கிறதா ?

துரை : எனக்கா ?

விஜயா : என்ன யோசிக்கிறீர்கள் ?

துரை : ஆயிருக்கிறது. ஆனல், அது கலியாணத்தில் சேர்த்தியில்லை.

விஜயா : அதென்ன அப்படி ?

துரை : அது பெரிய கதை. அதை விடுங்கள். வேறு ஏதாயினும் பேசுவோம்.

விஜயா : நீங்கள் சொல்வதைப் பார்த்தால் என்னைப்போல நீங்களும் இரண்டுங் கெட்டான் நிலையில் தான் இருக்கிறீர்கள் என்றல்லவா ஏற்படுகிறது ?

துரை : உங்கள் சமாசாரம் என்ன ?

விஜயா : என் அவல வாழ்க்கையைச் சொல்லி உங்களைத் துக்கத்தில் ஆழ்த்த விரும்பவில்லை.

துரை : பரவாயில்லை, சொல்லுங்கள்.

விஜயா : எனக்கு விளையாட்டுப் பருவத்திலேயே விவாகமாய் விட்டது. ஆனல்............?

துரை ; ஆனல்........என்ன ?

விஜயா : பெற்ருேர் என்னை என் கணவனுடன் வாழ விடவில்லை.

துரை : ஏன் ?

விஜயா : எனக்குப் பருவம் வருவதற்குள் சம்பந்திகளிடையே பணம் விஷயமாகச் சண்டை வந்துவிட்டது.

துரை : உம். அப்புறம் ?

விஜயா : இத்தனைக்கும் என் பெற்ருேரும் மாமனுர் வீட்டாரும் நெருங்கிய உறவினர்கள். அவர் அம்மான் பிள்ளை. நான் அத்தைப் பெண்.

துரை : அப்படியா ? பணத்துக்காகவா தங்கள் பிள்ளைகளின் வாழ்வைக் கெடுத்தார்கள் ? பாவிகள். என் குடும்பத்தாரைப் போலத்தான்........

விஜயா : என்ன ! உங்க பெற்ருேரும் இப்படித் தாஞ :

துரை : ஆமாம். அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறீர்கள் :

விஜயா : இது என்ன ? விந்தையாய் இருக்கிறதே ! நாம் இருவரும் பலவகையிலும் ஒரே நிலையில் தான் இருக்கிருேம். அதனுல்தான் போலும் நம் இருவரிடையும் இவ்வளவு மன ஒற்றுமையும் ஈடுபாடும் ஏற்பட்டிருக்கிறதென்று நினைக்கிறேன்.

துரை : இது அதிசயமாய்த்தான் இருக்கிறது.

விஜயா : ஆமாம் ; நீங்கள் உங்கள் ஊர் எதுவென்று சொன்னீர்கள் ?

துரை : ஏன் ? திருச்சி.

விஜயா : என் மாமனார் வீடும் திருச்சிதான்.

துரை : என்ன ! உங்க மாமனார் வீடு திருச்சியா ?

விஜயா : ஆம்; அவர் கலெக்டர் ஆபிஸில் ஹெட் கிளார்க்கா யிருக்கிறார்.

துரை : என்ன ! (யோசனையோடு) கலெக்டர் ஆபிஸில் கிளார்க்காகவா ? பெயர் என்ன ?

விஜயா : மாணிக்கம் பிள்ளை.

துரை : உங்கள் கணவர் பெயர் !

விஜயா : கணவர் பெயரை மனைவி சொல்லலாமா? மாமனார் பெயரைக்கூட.....

துரை : போகட்டும். அவர் என்ன செய்கிறார் ? எங்கிருக்கிறார் ?

விஜயா : தெரியாது.

துரை : தெரியாதா ?

விஜயா : ஆம் ; அவரைப்பற்றித் தெரிந்துகொள்ளும்படி என்பெற்றோர் விடவில்லை. பி. எஸ். ஸி. ஆனர்ஸ் பாஸ் பண்ணினார் என்பதுதான் கடைசியாக எனக்குத் தெரியும். அவருக்கு மறுவிவாகம் செய்ய மாமா முயற்சி செய்கிறார் என்றும் சொல்லிக்கொண்டார்கள்.

துரை : அப்படியா ? உங்கள் ஊர் திருநெல்வேலி என்றல்லவா சொன்னீர்கள் ?

விஜயா : ஆமாம்.

துரை : உங்கள் தாய் தகப்பனார் பெயர் சொல்லவில்லையே !

விஜயா : அப்பா பெயர் நீலகண்டம் பிள்ளை; அம்மா கோமதி.

துரை : ஆ! அப்படியானால் நீ...... ? உன் பெயர் என்ன ? சரியாகச் சொல்.

விஜயா : ஏன் ? விஜயலக்ஷ்மிதான்.

துரை : விஜயம் என்று வீட்டில் அழைப்பார்கள் அல்லவா ?

விஜயா : ஆம். அது உங்களுக்கு எப்படி தெரியும் ?

துரை : விஜயா............நீ......?

விஜயா : என்னைத் தெரியுமா உங்களுக்கு ? முன்பே தெரியுமா ? எப்படி தெரியும் ?

துரை : (மௌனம்)

விஜயா : ஏன் மௌனமாயிருக்கிறீர்கள் ? நீங்கள் யார் ? உங்கள் உண்மைப் பெயரென்ன ?

துரை : நான்தான்........

விஜயா : நான்தான் என்றால்....? நீங்கள் யார் சொல்லுங்கள் ? உங்களுக்கு என்னை எப்படித் தெரியும் ?

துரை : எப்படித் தெரியுமா ? சொந்தப் பெண்டாட்டியைக் கணவனுக்குத் தெரியாமல் போய்விடுமா ?

விஜயா : என்ன ? அப்படியானால் நீங்கள்....?

துரை : ஆம், பாவி நான்தான். பெற்றோர் பேச்சைக் கேட்டுக்கொண்டு உன்னைப் பரதவிக்க விட்டுப்போன சண்டாளன் நான்தான்.

விஜயா : ஐயோ! நீங்களா? நீங்கள்தானா 'முருக வேள்' என்ற புனைபெயரில் மறைந்து கொண்டிருந் தீர்கள்?

துரை : ஆம்; விஜயா, நானேதான்.

விஜயா : கடைசியாக....ஆமாம். நீங்கள் வீட்டை விட்டு எப்போது கிளம்பினீர்கள்?

துரை : அப்பாவும் அம்மாவும் என்னை வேறொரு கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத் தியபோதுதான். தொந்திரவு பொறுக்கமாட்டாமல்' வீட்டைவிட்டு வெளியேறி விட்டேன்.

விஜயா : அப்புறம்?

துரை : விமானப் படையில் சேர்ந்து விபத்துக் காளாகி............

விஜயா : விபத்துக்காளானீர்களா? அதில்தான் முகம் இப்படி............

துரை : ஆம். பிராணபத்திலிருந்து தப்பிவிட்டேன். பின் அமைதிவேண்டி நீலகிரியை அடைந்தேன்.

விஜயா : நான் கூடப் பெற்றோர் நச்சரிப்பைத் தாங்காமல்தான் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவந்து இந்தக் காலேஜில் ஆசிரியையாய்ச் சேர்ந்தேன்.

துரை : எப்படியோ, விதி நம் வாழ்க்கையில் நன்றாகச் சதுரங்கமாடி விட்டது.

விஜயா : நம் சந்திப்பு அபூர்வமானது. உங்களை இப் பிறப்பில் சந்திப்பேனென்று கனவிலும் எண்ண

வில்லை—கடைசியாக, கடவுள் கருணை கூர்ந்து என் கண்ணாளனைக் கூட்டி வைத்துவிட்டான்.

துரை : ஊம்! (பெருமூச் செறிகிறான்.)

### காட்சி 22

**இடம் :** சென்னை.

**காலம் :** காலை.

**பாத்திரங்கள் :** துரைராஜன், விஜயம்.

விஜயா : ஏன்? நாம் மீண்டும் ஒன்று கூடி வாழ முடியாது என்று சொல்கிறீர்கள்?

துரை : ஆம்; வாழ்வதற்கு வழியே கிடையாது என்றுதான் நான் நினைக்கிறேன். நாம் முன் எப்போது ஒன்று கூடி வாழ்ந்தோம்? மறுபடியும் சேர்ந்து வாழ்க்கை நடத்துவதற்கு. பெற்றோர் என்னும் கொடியோர்களால், நாம்தான் சிறு வயதிலேயே பிரிக்கப்பட்டு விட்டோமே!

விஜயா : இதுவரை பிரிக்கப்பட்டிருந்தால் என்ன! இனி, நாம் ஒன்றுகூடி வாழ்வது? இதில் என்ன தடை இருக்கிறது?

துரை : எனக்கென்னமோ அது நல்லதாகத் தோன்றவில்லை. ஒரேயடியாகப் பட்டுப்போன மரத்தை மீண்டும் தளிர்க்க வைக்கமுடியுமா என்று யோசித்துப் பார்.

விஜயா : ஏன் முடியாது? சில சமயம் பட்டுப் போன மரமும் துளிர்க்கத் தொடங்குகிறதே!

துரை: ஆண்டவனோ அவதார புருஷர்களோ வந்து தான் அற்புதஞ் செய்யவேண்டும்.

விஜயா : என்ன, அப்படிச் சொல்லுகிறீர்கள் ?

துரை : பின் என்ன ? நானோ பாதி வயதைக் கடந்து விட்டேன். உனக்கும் ஏறக்குறைய வயதாகி விட்டது. இந்நிலையில், நாம் காலங் கடந்து இல்வாழ்க்கையைத் தொடங்குவதென்பது அவ்வளவு ஸ்வாரஸ்யமாக இருக்காது.

விஜயா : அப்படியானால், நாம் இவ்வளவு காலங் கழித்து அபூர்வமாக ஒருவரை யொருவர் சந்தித்தும் யாதொரு பயனுமில்லை யென்று சொல்கிறீர்கள்? உங்கள் உத்தேசந்தான் என்ன ? நம் எதிர்காலம் எப்படி யிருக்கவேண்டும் என்று எண்ணுகிறீர்கள் ?

துரை : ஏன் ? இதுவரை இருந்தபடியேதான் இனியும் இருப்பது? நீயோ கலைமகள் போல் கல்விக்கு அதிகாரியா யிருக்கிறாய். நூற்றுக் கணக்கான மாணவிகள் உன்னிடம் வாசிக்கிறார்கள். அவர்கள் உன்னை ஆசிரியையாக மட்டுமல்லாமல் அன்னையாகவும் கொண்டிருக்கிறார்கள். நீ தாம்பத்திய வாழ்க்கையில் ஒரு சில குழந்தைகளைத்தான் பெறலாம். ஆனால் ஆசிரிய வாழ்க்கையிலோ ஆயிரக் கணக்கான மக்களை ஆண்டு தோறும் பெற்று வருகிறாய். இந்த உன்னத வாழ்க்கையைக் கெடுக்க நான் விரும்பவில்லை.

விஜயா : உங்கள் நிலை......?

துரை : எனக்குத்தான் இருக்கவே இருக்கிறது ஏகாந்த வாழ்க்கை. நானும் கலை இலக்கியமும் இருக்கவே

இருக்கிறேம். நான் சிருஷ்டிக்கும் கற்பனை யுலகில் பலவிதமான கற்பனை மனிதர்களோடு சதா உறவாடிக் கொண்டிருப்பேன். இதைவிட இனிய வாழ்வு எனக்கு வேறு என்ன இருக்கிறது?

விஜயா: எவ்வளவு திடசித்தம்? இந்த உறுதியில் ஆயிரத்தில் ஒரு சிறு கூறுகூட எனக்கு இல்லையே! நீங்கள் மகா மேதை மட்டுமல்ல; ஆன்ம சாம்ராஜ் யத்தை ஆண்டு வரும் ராஜயோகி என்பதை இப்போது தான் பேதை நான் உணருகிறேன்.

துரை: விஜயா, வீணுக ஏதேதோ பேசி மனத்தை அலட்டிக் கொள்ளாதே.

விஜயா: நீங்கள் குன்றின்மேல் கோவிலைக் கட்டி விட்டீர்கள்........நான் குட்டையில் விழுந்த எருமை மாதிரி அற்ப உணர்ச்சிகளுக்குள் சிக்குண்டு தவிக் கிறேன்.

துரை: ஒரேநாளில் ஒரு வாழ்க்கை நேர்ந்துவிட்டது. அதனுல் ஜுரவேகத்துடன் உணர்ச்சிகள் வீசுகின்றன. வீட்டுக்குப் போய் யோசித்துப் பார். ஆசையற்ற அமைதியும் இச்சையற்ற உறுதியும் மறுபடியும் ஏற்படும்.

விஜயா: ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும். வேறு வழி யில்லை. ஒரு கணம் நிலை தவறிவிடும் போலிருந்தது. ஊன்றுகோல் கொடுத்து உதவியதற்காக உங்களுக்கு என் நன்றி.

துரை: எல்லாம் வல்ல இறைவன் உனக்குச் சாந்தியும் சந்துஷ்டியும் அளிப்பாராக.

விஜயா: ......; இல்லை. .........! எனக்கு விடை கொடுங்கள். நான் போய் வருகிறேன், நான் பெற்றெடுக்காத குழந்தைகள் அத்தனை பேரும் காத்திருப்பார்கள்.

துரை: நானும் வருகிறேன். எனக்கு நானே குன்றின்மீது கட்டிக் கொண்ட காராக்கிரகம் காத்துக் கொண்டிருக்கும்.

(இருவரும் பிரிந்து போகிறார்கள்.)

—: முற்றும் :—

மதுரை காமராசர் பல்கலை
அன்பளிப்பு
தி.க. சண்முகம்
தமிழியல்துறை

233

# எமது புதிய வெளியீடுகள்

## பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, எம்.ஏ., எல்.டி., எழுதியவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரித்திரம் பேசுகிறது | .... | ரூ. | 3 | 0 | 0 |
| மருதூர் மாணிக்கம் | .... | ரூ. | 3 | 0 | 0 |

## சிறந்த நாவலாசிரியர்-நாடகாசிரியர் நாரண—துரைக்கண்ணன் ("ஜீவா") எழுதியவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மேனகா | .... | ரூ. | 1 | 8 | 0 |
| சதுரங்கம் | .... | ரூ. | 1 | 4 | 0 |
| புதுமைப் பெண் | .... | ரூ. | 1 | 12 | 0 |

## அருணன் எழுதியவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இல்லற இன்பம் | .... | ரூ. | 1 | 0 | 0 |
| புது வாழ்வு | .... | ரூ. | 1 | 8 | 0 |

# அருணோதயம்

சென்னை—14.

Wrapper Printed at the Asian Printers, Madras-5